# திருமறை ஆசான்

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மலர் - 13 ஜூன் - 2000 இதழ் - 6



அதிகாலையில் உமது கிருபையைக் கேட்கப் பண்ணும்,
உம்மை நம்பியிருக்கிறேன், நான் நடக்க வேண்டிய வழியை
எனக்குக் காண்பியும்...... சங்கீதம். 143:8

# அருமையான வாய்ப்பு

பரிசுத்த ஆவியானவரின் பணி (170 பக்கங்கள்) மற்றும் புதிய ஏற்பாட்டு ஆராதனை(112 பக்கங்கள்) ஆகிய நூல்கள், தரம் நிறைந்த தாளில் அழகாக அச்சிடப்பட்டு, மிக நேர்த்தியான முறையில் பைண்டிங் செய்யப்பட்டு,உங்களுடைய உபயோகத்திற்கு ஆயத்தமாக உள்ளது.

பிரசங்கிகளுக்கும், வேத ஆசிரியர்களுக்கும், வேத மாணவர்களுக்கும், சபை அங்கத்தினர்களுக்கும் மிகவும் பயனுள்ள ஒன்று.

புத்தகம் முற்றிலும் இலவசம். ஆனால், தபால் செலவு உங்களைச் சார்ந்தது. அனுப்பப்படும் தொகை அளவுக்கு புத்தங்கள் அனுப்பப்படும். அனுப்பவேண்டிய குறைந்தபட்ச தொகை ரூ.20/−

*தொடர்பு முகவரி:*
*தமிழ் உலக ஆத்தும ஆதாயத் திட்டம்*
*தபால் பெட்டி எண் 27,*
*காங்கயம்* - 638 701. இந்தியா

குறிப்பு: M.O. கூப்பனில் உங்கள் முகவரியைத் தெளிவாக எழுதவும்

## ஆசாரியின் அறிவுரையிலே...


| | | |
|---|---|---|
| 1. | ஆசிரியர் உரை | 01 |
| 2. | விக்கிரக ஆராதனை என்னும் பாவம் | 09 |
| 3. | பெயரைத் தரித்துக்கொள்ளுங்கள் | 12 |
| 4. | பெண்கள் பகுதி | 13 |
| 5. | வாலிபர் பகுதி | 16 |
| 6. | லேவியராகமம் ஒரு கண்ணோட்டம் | 19 |
| 7. | வெளிப்படுத்தின விசேஷம் | 20 |
| 8. | தெரிந்து கொள்ளுங்கள் | 26 |
| 9. | பாபிலோனிய அடிமைத்தனம் | 29 |
| 10. | விசுவாசத்தின் அடிப்படைகள்-5 | 31 |

# THIRUMARAI AASAAN

**Published by Church of Christ**

**Editor**
**S. RAJANAYAGAM**

**Honorary Editor**
**J.C. CHOATE**

**Dharapuram Road, KANGAYAM - 638 701, Tamil Nadu, India**
**Pleading for the restoration of pure New Testament Christianity**

**Vol .13 June - 2000 Issue - 6**

*ஆசிரியவுரை*

## " நீங்கள் கிறிஸ்துவின் நிருபம் "

**நி**ருபம் என்ற வார்த்தை, ஒரு கிறிஸ்தவனுக்கோ அல்லது கிறிஸ்தவத்திற்கோ புதிதான ஒன்றல்ல. ஏனெனில், பரிசுத்த ஆவியினால் ஏவப்பட்டு அருளப்பட்ட 21 நிருபங்கள் புதிய ஏற்பாட்டில் இடம் பெற்றுள்ளது. இன்னும், கிறிஸ்தவத்தோடு தொடர்பற்ற மற்றவர்களுக்கும் கூட,இது புதிதான வார்த்தையென்று சொல்லிவிடமுடியாது. எப்படியெனில் , இப்பூமிக்குண்டான வாழ்க்கையில்,ஒருவன் எவ்விடத்தில் வாழ நேரிட்டாலும்,அங்கிருந்து, தனக்கு வேண்டியவர்களோடு அவன் உறவாட விரும்பும் இயல்புடையவனாயிருப்பதால், மற்றவர்களுக்கு நிருபம் எழுதுவதிலிருந்தும், மற்றவர்களிடமிருந்து நிருபம் பெற்றுக்கொள்வதிலிருந்தும் தன்னை விலக்கிக்கொள்ள முடியாது.

நிருபம் என்றால் **கடிதம்** என்று நம் எல்லோருக்குமே தெரியும். எழுதப்படும் ஒவ்வொரு கடிதமும் வார்த்தைகளால் வடிவமைக்கப்படுகிறது. ஒருவனிடத்திலிருந்து புறப்படும் வார்த்தைகள்,அவனுடைய எண்ண ஓட்டத்திற்கு அத்தாட்சியாயிருக்கிறது. இப்படி, மனதின் பிரதிபலிப்பாக இருக்கும் வார்த்தைகள்,உருப்பெற்று,ஓரிடத்திலிருந்து போவதும், மற்றொருவரிடத்திலிருந்து வருவதும் தான், கடிதம் அல்லது நிருபமாகும். நாம் படிக்க நேரும் ஒரு கடிதத்தை வைத்து, அதை எழுதினவரின் மனநிலையை போதுமான அளவு அளவிடமுடியும்.

நமது கையில் உள்ள வேதாகமத்தின் வார்த்தைகளை, நாம் தேவனுடைய வார்த்தைகள் என்று சொல்லுகிறோம். ஏனெனில் அது, தேவனுடைய எண்ணத்தின் பிரதிபலிப்பாக உள்ளது. அதிலுள்ள ஒவ்வொரு

வார்த்தைக்கும் தேவன் ஆதாரமாக இருப்பதால் தான், நாம் அதை தேவனுடைய வார்த்தையென்று சொல்லுகிறோம். மொத்தத்தில், வேதாகமம் மனிதனுக்கான தேவனுடைய திட்டத்தின் வெளிப்பாடாகவும், மனிதனிடமிருந்து தேவனுடைய எதிர்பார்ப்பு என்னவென்பதின் விளக்கமாகவும் உள்ளது.

சரி, தேவனுடைய ஆவியானவரைக் கொண்டு, மொத்தம் 21 நிருபங்கள் புதிய ஏற்பாட்டில் அருளப்பட்டிருந்தாலும், அவைகளில் பதினான்கிற்குச் சொந்தக்காரராக பவுலடியார் மாறி, புதிய ஏற்பாட்டின் பெரும்பகுதியை ஆக்கிரமித்துக் கொள்கிறார். ஆவியானவரின் வழிநடத்துதலினாலே, அந்நிருபங்களில், பவுலடியார்,அநேக தேவ இரகசியங்களை வெளிக்கொணர்ந்து, பல உபதேசக்கொள்கைகளுக்கு வரைமுறையும், நெறிமுறையும் தந்து, நடைமுறைப் பிரச்சினைகளைத் தீர்க்கும் வழியமைத்ததோடல்லாமல், குறைகளைக் கண்டிக்கவும், நிறைகளைப் பாராட்டவும் செய்துள்ளார். ஒவ்வொரு நிருபமும், அது யாருக்கு எழுதப்பட்டுள்ளதோ, அவர்களை மையமாக வைத்து, பலமான பின்னணியோடும், அதற்கேற்ற கருத்துச் செறிவோடும் எழுதப்பட்டுள்ளது.

இந்த அடிப்படையில் தான், அப்போஸ்தலன் பவுலாலே, கொரிந்து பட்டணத்தாருக்கு எழுதப்பட்ட நிருபங்களை நாம் அணுகவேண்டும். கொரிந்து பட்டணத்து நிருபத்தை நாம் இங்கே எடுத்துக் கொள்வதற்கு காரணம், நம்முடைய தலைப்பு அந்நிருபத்தில் தான் இடம்பெற்றுள்ளது. கொரிந்து பட்டணத்துக்கு எழுதப்பட்ட இரண்டு நிருபங்களும் முற்றிலும் வேறுபட்ட பின்னணியோடு எழுதப்பட்டுள்ளதை நாம் மனதில் கொள்ள வேண்டும்.

கொரிந்துவுக்கான முதல் நிருபம் மிகுந்த பாரமான மனநிலையோடு எழுதப்பட்டுள்ளது. அதில், அவர்களுக்குள் புரையோடிப் போயிருந்த பிரச்சினைகளாகிய பிரிவினைகள், வழக்குகள், ஒழுக்கக்கேடுகள், கேள்விக்கிடமான நடத்தைகள் போன்றவற்றை, தனது அப்போஸ்தல அதிகாரத்தைக் கொண்டு சாடியுள்ளார். அத்துடன், கர்த்தரின் பந்தி மற்றும் ஆவிக்குரிய வரங்கள் போன்றவற்றில்,அவர்களின் நெறியற்ற செயல்பாட்டை சுட்டிக்காட்டவும் தயங்கவில்லை. இன்னும் அவர்களின் பல கேள்விகளுக்குத் தக்க பதிலைக் கொடுக்கவும் அவர் மறக்கவில்லை.

இப்படி பாரப்பட்டு எழுதப்பட்ட, இந்த முதலாம் நிருபம் கொரிந்தியருக்குப் போய்ச் சேர்ந்த பின்பு அப்போஸ்தலன் பவுல் எதிர்பார்த்த மரியாதையோ,பலனோ அதற்குக் கிட்டவில்லை. மாறாக, இந்த நிருபத்தில் பவுல் பயன்படுத்தின வார்த்தைகளிலும், அவனுடைய செயல்பாட்டிலும், அவனுடைய அப்போஸ்தலத்துவ அதிகாரத்திலும் குறை கண்டுபிடிக்கப்பட்டது. தனிப்பட்ட முறையிலும் அவர் கடுமையாக விமர்சிக்கப்ட்டார். சலனப்புத்திக்காரர் என்றும், தோற்றத்திலும்,பேச்சிலும், தாக்கத்தை ஏற்படுத்தும் வசீகரம் அற்றவர் என்றும், பெருமைக்காரர் என்றும், நேர்மையற்றவர் என்றும் குற்றம் சாட்டப்பாட்டார். எல்லா்வற்றிக்கும் மேலாக, இவருடைய அப்போஸ்தலத்துவத்தை ஒரு விவாதப் பொருளாக்கி அதனடிப்படையில்,

கொரிந்தியர் பவுலுக்கு விரோதமாக எழும்பும்படி செய்து, அதில் கணிசமான வெற்றியையும் கள்ளப்போதகர்கள் பெற்றுவிட்டனர்.

இந்நிலையில் தான், அப்போஸ்தலன் பவுல், தான் விசுவாசத்தில் பெற்றெடுத்த உத்தம குமாரர்களில் ஒருவனாகிய தீத்துவை அனுப்பி, பிரச்சினைகளையும், பிரச்சினைகாரர்களையும் நேருக்குநேர் சந்திக்கும்படி செய்து, எல்லாவற்றிக்கும் ஒரு தீர்வு காண முழு முயற்சி எடுத்தார். அப்படி கொரிந்து பட்டணத்துக்கு சென்று திரும்பிய தீத்து கொடுத்த அறிக்கையினடிப்படையில் தான், இரண்டாவது நிருபம் எழுதப்பட்டது. தீத்துவின் அறிக்கை அவருக்கு மிகுந்த மகிழ்ச்சியைக் கொடுத்தது. ஏனெனில், பெரும்பாலானவர்கள் தங்களின் தவறான நிலையை மாற்றி, மனம்மாறி விட்டதை அறிந்தார். ஆயினும் இன்னும் மனம்மாறாத சிலரும், அவருடைய காரியங்களை விமர்சித்து குறைகானும் சிலரும் அச்சபையில் இருப்பதையும் அறிந்துக் கொண்டார். ஆகவே தான், இந்த நிருபத்தை, அப்படிப்பட்ட வர்களுக்குப் பதில் கொடுக்கும்படியாக, தன்னுடைய நடத்தை, செயல்பாடு, தன்னுடைய அப்போஸ்தலத்துவம் ஆகியவற்றுக்கு அர்த்தம் கற்பிப்பதற்குப் பெரும்பாலும் செலவிடுகிறார்.

கொரிந்து பட்டணத்திலிருந்த, குறைமதிகொண்ட குறையாளர்களின் குற்றச்சாட்டுகளில் இரண்டு அவர் பெருமைகாரர் என்பதும் மற்ற கள்ளத்தீர்க்கதரிசிகள் போல் அவர் உபசார நிருபங்களை கேட்பதுமில்லை, கொண்டு வருவதுமில்லையென்பது. இக்குற்றச்சாட்டுக்குப் பதில் தான் கீழ்வரும் வசனப்பகுதி.

***"எங்களை நாங்களே மறுபடியும் மெச்சிக்கொள்ளத் தொடங்கிறோமோ? அல்லது சிலருக்கு வேண்டியதாயிருக்கிறது போல உங்களுக்கு உபசார நிருபங்களை அனுப்பவும், உங்களிடத்தில் உப்ச்சார நிருபங்களைப் பெற்றுக்கொள்ளவும் எங்களுக்கு வேண்டியதோ? எங்கள் இருதயங்களில் எழுதப்பட்டும், சகல மனுஷராலும் அறிந்து வாசிக்கப்பட்டும் இருக்கிற எங்கள் நிருபம் நீங்கள் தானே. ஏனெனில், நீங்கள் எங்கள் ஊழியத்தினால் உண்டாகிய கிறிஸ்துவின் நிருபமாயிருக்கிறீர்களென்று வெளியரங்கமாயிருக்கிறது. அது மையினாலல்ல, ஜீவனுள்ள தேவனுடைய ஆவியினாலும் கற்பலகைளிலல்ல, இருதயங்களாகிய சதையான பலகைகளிலேயும் எழுதப்பட்டிருக்கிறது"*** *. (2கொரி.3:1-3)*

கொரிந்தியருக்கு எழுதின இரண்டாம் நிருபத்தைக் கவனித்தால், மற்ற 13 நிருபங்களில் அவர் அதிகம் பயன்படுத்தாத "***நிருபம்***" என்ற வார்த்தையை இதில் அடிக்கடி பயன்படுத்துகிறார். *(5:12;10:12,18; 12:11;13:6)*. இது பவுலடியாரைப் பற்றி தவறாகப் பேசுவோருக்குப் பதிலளிக்க வேண்டிய கட்டாயம் அவருக்கிருந்துள்ளதென்பதைத் தான் காட்டுகிறது. இன்னும் சிலருக்கு வேண்டியாதயிருக்கிறது போல, எங்களுக்கு உபசார நிருபங்க்ள் தேவையில்லை யென்பதை அழுத்தம் திருத்தமாகச் சொல்லிவிட்டு, இங்கு ஒரு பெரிய உண்மையை வெளிப்படுத்துகிறார்.அது தான், எங்கள் நிருபம் நீங்கள் தானே என்பதும், நீங்கள் கிறிஸ்துவின் நிருபம் என்பதும்.

இப்பொழுது உபசார நிருபங்கள் என்றால் என்னவென்றுகொஞ்சம் தெரிந்து கொள்வோம். உபசார நிருபங்கள் என்பது ஒருவரைப் பற்றி எழுதிக் கொடுக்கப்படும் நற்சாட்சிக் கடிதங்கள். அந்நாட்களில், அப்படிப்பட்ட கடிதத்திற்கு அவசியமிருந்தது.சபை வட்டாரத்தில் அப்படிப்பட்ட பழக்கம் வழக்கத்திலிருந்தது. பிரயாணத்திலிருக்க நேரும் ஒரு கிறிஸ்தவன்,ஒரு சபையிலிருந்து நற்சாட்சி கடிதம் பெற்றுச் சென்றால்,அவன் செல்லும் இடங்களில் அங்குள்ள சபையார் அவனை வரவேற்று உபசரிப்பர். வரும் சகோதரனோ அல்லது சகோதரியோ விசுவாசத்திலும், உபதேசத்திலும் பழுதிதல்லாதிருக்கிறபடியால், தங்களால் முடிந்த அனைத்து உதவிகளையும் மனமுவந்து செய்வர். அப்போஸ்தலன் பவுல், கெங்கிரேயா சபை சகோதரியாகிய பெபேயாளுக்கு நற்சாட்சி கொடுத்து, ஏற்றுக்கொள்ளும்படி ரோமாபுரியாரைக் கேட்கிறார்.(ரோமார்.16:1,2). ஆகவே, உபசார நிருபங்கள் என்பது இது தான். ஆனால், கள்ளதீர்க்கதரிசிகளும், சபையிலிருந்த கள்ளச் சகோதரர்களும் இந்த உபசார நிருபத்தை, தங்களது தவறான நோக்கம் நிறை வேறுவதற்கும், பொய்யான உபசேதத்தைப் பரப்புவதற்கும் கூட பயன் படுத்தினார். ஆகவேதான், அப்பேஸ்தலன் யோவான். ஒரு கட்டத்தில், இக்காரியம் பற்றி எச்சரிக்க வேண்டிய கட்டாயம் கூட ஏற்பட்டது.ஆகவேதான், தானதுஇரண்டாவது நிருபத்தில் இவ்விதம் எழுதியுள்ளான். ***"ஒருவன் உங்களிடத்தில் வந்து, இந்த உபதேசத்தைக் கொண்டுவராமலிருந்தால், அவனை உங்கள் வீட்டில் ஏற்றுக் கொள்ளாமலும்,அவனுக்கு வாழ்த்துதல் சொல்லாமலும் இருங்கள் "*** *(2யோவான்.10).*

சரி, இப்படிப்பட்ட உபசார நிருபங்கள், அதாவது நற்சாட்சிக் கடிதங்கள் தனக்குத் தேவையில்லையென்று சொல்லும் பவுல் அப்போஸ்தலன், அத்தோடு நிற்காமல், எங்கள் நிருபம் நீங்கள் தானே என்றும், நீங்கள் கிறிஸ்துவின் நிருபம் என்று சொல்லுகிறார். இப்படிச் சொல்லுவதற்கு முன்பாக அவர் பயன்படுத்தும் வார்த்தைகள் அர்த்தமும் ஆழமும் கொண்டதாயிருக்க படியால், அவை பற்றி பார்ப்போம்.

## எங்கள் இருதயங்களில் எழுதப்பட்டும்....

அந்நாட்களில், உபசார நிருபங்கள் தோற்சுருள்களிலும், ஓலைச் சுவடிகளிலும் தான் எழுதப்படுவது வழக்கம்.ஆனால், கொரிந்தியராகிய நீங்கள்,எங்கள் இருதயங்களில் எழுதப்பட்டுள்ளீர்கள் என்கிறார். அதெப்படி?

பெரும்பாடுகளுக்கும், மிகுந்த பிரயாசங்களுக்கும் மத்தியில் நாம் விரும்பும் ஒன்றைப் பெற்று கொள்ளும்போது,அது பற்றிய நினைவு நமதுநெஞ்சில் நீங்கா இடம் பெற்றுவிடும். இந்த அடிப்படையில் தான், கொரிந்தியரே நீங்கள் எங்கள் இருதயங்களில் எழுதப்பட்டுள்ளீர்கள் என்று கூறுகிறார். அதாவது, கொரிந்துபட்டணத்தில் கர்த்தருடைய சபையை ஏற்படுத்துவதற்கு பவுல் மிகுந்த சோதனைகளையும், உபத்திரவங்களையும்

சந்திக்க வேண்டியிருந்தது.அந்த அனுபவங்கள் ,எங்கள் இருதயங்களிலும் அவைகளின் தாக்கம் உங்கள் இருதயங்களிலும் பதிந்துள்ளபடியால்,உங்களிடம் வருவதற்கு எங்களுக்கு எதற்குஉபசார நிருபம் என்று கேட்கிறார்? சுவடிகளிலும், தோலிலும் எழுதப்படுவது பெரிதா அல்லது இருதயங்களில் எழுதப்படுவது பெரிதா என்று கேள்வி எழுப்புகிறார்.

## சகல மனுஷராலும் அறிந்து வாசிக்கப்பட்டும் இருக்கிற....

கொரிந்தியரே, நீங்கள் சொல்லும் உபசார நிருபங்கள், ஒரு குறிப்பிட்ட சபையினரால் தான் வாசிக்கப்படுகிறது. ஆனால், கொரிந்தியராகிய நீங்களோ,சகல மனுஷராலும் அறிந்து, வாசிக்கப்படுகிறீர்கள் என்றும் கூறுகிறார். அதெப்படி?

கொரிந்து பட்டணம் அன்றைய உலகின் தலைசிறந்த பட்டணம் அப்போதைய கிரேக்கத்தில் அது மிக முக்கிய நகரம்.அதுமாத்திரமல்ல, உலகளாவிய வாணிப கேந்திரமாகவும்,உலக நாகரீகத்தின் சின்னமாகவும், கிரேக்க கலாச்சாரத்தின் வெளிப்பாடாகவும், போக்குவரத்து மையமாகவும், இன்னும் பலவித ஒழுக்கக் கேடுகளுக்கும் சிகரமாக இருந்தது. ஆகவே, இப்பட்டணத்தின் காரியங்கள் எதுவாயினும், அது உலகின் கவனத்திலிருந்து தப்ப முடியாது.

இப்படிப்பட்ட பட்டணம் அப்போஸ்தலன் பவுலின் சுவிசேஷ பிரசங்கத்தாலும், பலவித பாடுகளாலும் கர்த்தருக்குள் கொண்டு வரப்பட்டதென்று,அன்றைய உலகம் நன்றாகவே அறிந்திருந்தது. அதுமாத்திரமல்ல,அப்போஸ்தலன் பவுல் ஊழியத்தினிமித்தம் உலகெங்கும் சுற்றிதிரிந்த போது, எங்கெல்லாம் சென்றாரோ,அங்கெல்லாம் கொரிந்து சபை பற்றிப் பேசப்பட்டது. அவர்களெல்லோரும் கொரிந்து சபைபற்றி தெரிந்து கொண்டார்கள். ஆகவேதான், மற்றவர்களின் உபசார நிருபங்களைப்போலல்லாமல், நீங்கள் சகல மனுஷராலும் அறிந்து வாசிக்கப்படுகிறீர்கள் என்று சொல்லுகிறார்.

மேலும், 2கொரி.3:3ல் எங்கள் நிருபம் நீங்கள் தானே என்பதோடு நிறுத்திக் கொள்ளாமல்,ஒவ்வொரு கிறிஸ்தவனும் கவனிக்க வேண்டிய ஒரு பேருண்மையை வெளிப்படுத்துகிறார். அது நீங்கள் எங்கள் ஊழியத்தினால் உண்டாகிய கிறிஸ்துவின் நிருபமாயிருக்கிறீர்கள் என்பது.

## நீங்கள் கிறிஸ்துவின் நிருபமாயிருக்கிறீர்கள்...

நீங்கள் எங்கள் நிருபம் என்பதின் விரிவாக்கம் தான் நீங்கள் கிறிஸ்துவின் நிருபம் என்பது.கொரிந்து சபையார், பவுலின் நிருபம் என்பது விளங்கிக் கொள்ளக் கூடியது. ஆனால், எப்படி அவர்கள் கிறிஸ்துவின் நிருபம்? கிறிஸ்துவானவர் தமது ஆவியானவரைக் கொண்டு, பவுலடியாரை இடைக்கட்டி,அந்த ஆவியானவரின் வழிநடத்துதலின்படி, இந்த நிருபம் கொரிந்தியருக்கு எழுதப்பட்டபடியால், கொரிந்தியர் கிறிஸ்துவின் நிருபம் என்று அழைக்கப்படுகிறார்கள்.

இங்கே நன்றாக கவனியுங்கள். கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படிந்த கொரிந்தியர்கள், கிறிஸ்துவின் நிருபம் என்றால் அந்த சுவிசேஷத்திற்கு அதே வழிமுறையின்படி கீழ்ப்படிந்த ஒவ்வொரு கிறிஸ்தவனும் கிறிஸ்துவின் நிருபமே. ஒவ்வொரு நிருபத்திலிருந்தும், அதை எழுதினவர் வாசிக்கப்புடுவது போலவே, கிறிஸ்துவின் நிருபம் என்றழைக்கப்படுகிற ஒவ்வொரு கிறிஸ்தவனிடமும் கிறிஸ்து வாசிக்கப்படவேண்டும். அதற்காகத் தான் **"நீங்கள் கிறிஸ்துவின் நிருபம்"** என்று சொல்லப்பட்டிருக்கிறது. அப்படியானால் அருமையானவர்களே, கிறிஸ்து நம்முடைய வாழ்வின் மூலம் வாசிக்கப்படுகிறாரா? சொல்லுங்கள், சிந்தியுங்கள்.

நான் மற்றவர்கள் வாசிக்கும் ஒரு நல்ல நிருபமாயிருக்க முடியமா என்று சிந்திக்கும் இவ்வேளையில் ஒன்றை நான் உங்களுக்கு நினைப்பூட்டுகிறேன். நம்முடைய இரட்சகரும், மீட்பருமாகிய இயேசுக்கிறிஸ்து, நம்மைபோல் இப்பூமியில் வாழ்ந்தபோது அவர் "ஒரு நிருபமாகவே" இருந்தார். அவர் **தேவனுடைய நிருபமாயிருந்தார்.** எப்படியென்று கேட்கிறீர்களா? தொடர்ந்து கவனியுங்கள்.

யோவான் ஒன்றாம் அதிகாரம் ஒன்றாம் வசனம் இயேசுவை **வார்த்தை** என்று வர்ணிக்கிறது. நாம் ஏற்கனவே பார்த்தோம். **வார்த்தை என்பது எண்ணங்களின் வெளிப்பாடு.** பரலோகத்தின் தேவனுடைய திட்டத்தை கிறிஸ்துவானவர் வெளிப்படுத்தினபடியால் தான், அவர் அங்கே வார்த்தை என்று சொல்லப்பட்டுள்ளார். இக்கருத்துக்கு ஆதராமாக யோவான் 1:18-ஐ கவனியுங்கள். ***"தேவனை ஒருவனும் ஒருக்காலுங்கண்டதில்லை. பிதாவின் மடியிலிருக்கிற ஒரே பேறான குமாரனே அவரை வெளிப்படுத்தினார்."*** அந்தக் கிறிஸ்துவானவர், தன்னுடைய செயல்பாடுகள் அனைத்திலும் தேவனை வெளிப்படுத்தக் கூடியவராக இருந்தார். ஆகவேதான், கிறிஸ்துவை நாம் தேவனுடைய நிருபம் என்று சொல்லமுடியும்.

தேவனுடைய நிருபமாக இருந்த கிறிஸ்துவிடம், ஒரு சமயம், பிலிப்பு பிதாவை எங்களுக்கு காண்பியும் என்று கேட்டபோது, அதற்கு பதிலாக ***"என்னைக் கண்டவன் பிதாவை கண்டான்"*** என்று கூறுகிறார் (யோவா.14:8,9) அவரால் எப்படி, இவ்விதம் கூற முடிந்தது? இதிலே இரகசியம் ஒன்றுமில்லை. தன்னுடைய இப்பூவுலக வாழ்க்கையின் எல்லா கட்டத்திலும், தேவனுடைய சித்தத்திற்குத் தன்னை சமூலமாய் ஒப்புக்கொடுத்தார். ஆம், சோதனை நேரத்தில், எதிர்ப்பு நேரத்தில், துரோக நேரத்தில், வேதனை நேரத்தில், உயிரே போகும் நேரத்தில் கூட தன்னை அவர் சித்தத்திற்கு ஒப்புக்கொடுக்காமலிருக்கவில்லை. ஆனால், நம்முடைய ஆவிக்குரிய வாழ்வு எப்படி?

பேதுரு அப்போஸ்தலன் இவ்விதம் கூறுகிறார் **"...ஏனெனில், கிறிஸ்துவும் உங்களுக்காகப் பாடுபட்டு, நீங்கள் தம்முடைய அடிச்சுவடுகளைத் தொடர்ந்து வரும்படி உங்களுக்கு மாதிரியைப் பின் வைத்துப்போனார்"**

(1பேதுரு 2:21). தேவனுடைய உண்மை நிருபமாக இருந்த கிறிஸ்து,அவரைப் பின்பற்றும் நாம் கிறிஸ்துவின் நிருபமாக வாழும்போது, எப்படி வாழவேண்டுமென்ற மாதிரியை வைத்துப்போயுள்ளார். இந்த மாதிரியின் படியாக,நாம் ஒவ்வொருவரும் கிறிஸ்தவ வாழ்க்கையை அமைத்து வாழவேண்டியவர்களாயுள்ளோம். **தேவனுடைய நிருபமாயிருந்த கிறிஸ்து என்னை, கண்டவன் பிதாவைக் கண்டான் என்று சொன்னது போல கிறிஸ்துவின் நிருபமாயிருக்கிற அவருடைய பிள்ளைகளாகிய நாம் ஒவ்வொருவரும் என்னைக்கண்டவன் கிறிஸ்துவைக் கண்டான்** என்று சொல்லக் கடிய வர்களாயிருக்கவேண்டும். இதற்காகத் தான், அவர் பாடுபட்டு நமக்கு மாதிரியை வைத்துப் போயுள்ளார். ஆனால், நம்மில் எத்தனை பேர் அப்படிச் சொல்லமுடியும்? சொல்லுங்கள் பார்க்கலாம்.

ஒவ்வொரு கிறிஸ்துவனும், கிறிஸ்துவைப் பின்பற்ற விரும்பும் ஒவ்வொருவனும் கிறிஸ்துவின் நிருபமாக,அவர் சித்தம் செய்யும் ஒருவனாக வாழாதபடியால்தான், உலகம் கிறிஸ்துவை அறியவேண்டிய அளவு அறிந்து கொள்ளாமலிருக்கிறது.ஆனால், எல்லா மனுஷரும் இரட்சிக்கபடவும் சத்தியத்தை அறிகிற அறிவை அடையவேண்டுமென்பது *(1.தீமோ.2:4)* தான் தேவனுடைய சித்தம்.ஆகையால் தேவனுடைய இச்சித்தம் நிறைவேறி, எல்லாரும் இரட்சிப்படைய வேண்டுமானால், நாம் ஒவ்வொருவரும் உலகம் நம்மில் கிறிஸ்துவைக் காணும்படியான வாழ்க்கை வாழவேண்டும்.

இதை வாசிக்கும் அருமையான தேவனுடைய பிள்ளையே, பரிசுத்த வேதாகமம் எங்கள் நிருபம் நீங்கள்தானே என்றும், நீங்கள் கிறிஸ்துவின் நிருபம் என்றும் நம்மைப் பார்த்து சொல்வதை நாம் அற்பாக எண்ணாமல் அதற்கான முழுமுயற்சியில் நம்மை ஈடுபடுத்துவோம். உண்மையாகவே, நாம் அவருடைய நிருபமாக இருக்கவேண்டுமானால், கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையை நாம் பெற்றுக்கொள்ள வேண்டும் *(பிலி.2:5)*கிறிஸ்து தேவனுடைய வலதுபாரிசத்தில் வீற்றிருக்கும் இடத்திலுள்ள மேலானவைகளைத் தேடவேண்டும்*(கொலோ.3:1)* நம்மை அழைத்தவர் பரிசுத்தராயிருக்கிறது போல நாமும் நம்முடைய நடக்கைகள் எல்லாவற்றிலும் பரிசுத்தமாயிருக்கவேண்டும் *(1.பேது.1:15)* நம்முடைய குடியிருப்பு பரலோகம் என்பதை உணர்ந்து கொள்ளவேண்டும் *(பிலி.3:20)* அப்போஸ்தலன் பவுல் போல நல்லபோராட்டத்தைப் போராடவேண்டும் *(2தீமோ.4:7)*.

அதுமாத்திரமல்ல, நாம் ஆரோக்கியமான உபதேசத்துக் கேற்றவைகளை மாத்திரம் பேசவும், செய்யவும் வேண்டும். *(தீத்து 2:1)* ஏனெனில்,கிறிஸ்துவின் உபதேசம், கிறிஸ்துவுக்கடுத்த உபதேசம் என்ற பெயரில் பல போலியான உபதேசங்கள் கிறிஸ்தவத்தில் மலைபோல் குவிந்துகிடக்கிறது. கிறிஸ்தவர்கள் என்று சொல்லிக்கொள்ளும் பெரும்பாலனாவர்கள், ஆரோக்கியமான உபதேச்த்தைப் பொறுக்க மனதில்லாமல், செவித்தினவுள்ள்வர்களாகி, தங்கள் சுய இச்சைகளுக்கேற்ற

போதகர்களைத் தங்களுக்கு திரளாகச் சேர்த்துக்கொண்டு (2தீமோ.4:3) மாய்மாலமான பக்திப் பரவசத்தில் மூழ்கியிருக்கிறார்கள்.

இப்படி, இன்றைய கிறிஸ்தவத்தைப் பீடித்திருக்கிற இந்த இழிநிலை மாறி, உலகமானது மெய்க் கிறிஸ்தவத்தை அடையாளம் கண்டு அதை ஏற்றுக்கொள்ள வேண்டுமெனில், கிறிஸ்துவைப் பின்பற்ற விரும்பும் ஒவ்வொருவனும், கிறிஸ்துவின் உண்மையான உபதேசம் எது என்பதைக் கண்டுபிடிக்கப் போதுமான பிரயாசை எடுக்க வேண்டும். (1தெச.5:21) தீர்க்கதரிசிகளால் முன்னுரைக்கப்பட்டு (தானி.2:44;ஏசாயா 2:2,3; யோவேல் 2:28) யோவான் ஸ்நானகனால் பிரசங்கிக்கப்பட்டு (மத்.3:1,2), இயேசுக் கிறிஸ்துவால் வாக்குத்தத்தம் செய்யப்பட்டு (மத்.16:18,மாற்கு 9:1) எருசலேம் பட்டணத்தில், பெந்தெகோஸ்தே நாளில் (அப்.2ம்அதி)ஸ்தாபிக்கபட்ட சபை எதுவென்பதைக் கண்டுபிடிக்க வேண்டும்.அதுமாத்திரமல்ல,அந்த ஒரே சபைக்குள்ளாக, விசுவாசித்து (ரோமர் 10:17) மனந்திரும்பி (அப்.17:30) அறிக்கையிட்டு (ரோமர் 10:9,10) பாவமன்னிப்புக்காக ஞானஸ்நானம் (அப்.22:16) பெற்று, கர்த்தரால் சபையிலே சேர்க்கப்படவேண்டும்.(அப்.2:47).

கிறிஸ்துவைப் பின்பற்ற விரும்பும் ஒருவன் இவ்விதம் செய்து, அப்போஸ்தலருடைய உபதேசத்திலும், அந்நியோந்நியத்திலும்,அப்பம் பிட்குதலிலும்,ஜெபம் பண்ணுதலிலும் உறுதியாய்த் தரித்திருந்தால் (அப்.2:42), கிறிஸ்து நம்மில் வாசிக்கபடும்படியான ஒரு வாழ்க்கையை நிச்சயம் வாழ முடியும். இதற்கு வேறு குறுக்கு வழிகள் எதுவும் கிடையவே கிடையாது.

ஆகையால், அருமையானவர்களே, நாம் ஒவ்வொருவரும் கிறிஸ்துவின் நிருபமாயிருப்பதற்குத் தேவையான சகல பிரயாசைகளையும் ஜெபத்தோடு செய்வோமாக! இம்முயற்சியில் கர்த்தர் தாமே உங்களை ஆசீர்வதிக்கட்டும்.ஆமென்.

செ. ராஜநாயகம்

## ஆரோனும், கிறிஸ்துவும் ஒரு ஒப்பீடு

| ஆரோன் | கிறிஸ்து |
|---|---|
| 1 லேவி கோத்திரத்தைச் சேர்ந்தவன் (லேவி.8:6,7) | யூதா கோத்திரத்தைச் சேர்ந்தவர் (எபி.7:14) |
| 2 ஆரோனின் ஆசாரியத்துவத்தைச் சார்ந்தவன் (லேவி.8அதி) | மெல்கிசேதேக்கின் முறைமையின்படி ஆசாரியன் (எபி.6:20) |
| 3. தன் ஜனங்களுக்காக பலிகளைச் செலுத்துனான் (லேவி.9:15-17) | தன்னையே மக்களுக்காக ஜீவ பலியாக கொடுத்தார் (யோவா. 10:14-18) |
| 4.வருடத்திற்கு ஒரு முறை பரிசுத்த ஸ்தலத்திற்குள் பிரவேசித்தான் (லேவி.16:1-7) | ஒரே முறை பரலோகத்திற்குள்ளே பிரவேசித்திருக்கிறார் (எபி.9:25-29) |

# விக்கிரக ஆராதனை என்னும் பாவம்

மரத்தினாலும், கல்லினாலும், உலோகத்தினாலும், செய்யப்பட்ட ஒரு விக்கிரகம் ஏதோ ஒரு தேவனையோ அல்லது தேவதையையோ குறிப்பதாக கருதப்படுகிறது. ஒருவர் தமது நேரத்தை செலவழித்து தொழுதுகொள்ளத் தக்க வகையில், அவைகள் மனித உருவிலோ அல்லது இயற்கை அமைப்பிலோ அல்லது வேறு எந்த வடிவிலும் காணப்படும். விக்கிரக வணக்கம் என்பது மிகவும் புராதனமானதும், தற்போதைய நவ நாகரிகமானதுமாகும். அது அநேக வடிவத்திலே வந்தாலும் அது இன்னும் விக்கிரக ஆராதனையும், ஜீவனுள்ள ஒரே ஒரு தேவனை தொழுது கொள்ளாத பாவமென்றும் இந்த விக்கிரக வணக்கம் முத்திரை பதிக்கப்பட்டது.

விக்கிரகங்களைக் குறித்து வேதம் கூறுகிறது;*"என்னையன்றி உனக்கு வேறே தேவர்கள் உண்டாயிருக்க வேண்டாம். மேலே வானத்திலும் கீழே பூமியிலும், பூமியின் கீழ் தண்ணீரிலும் உண்டாயிருக்கிறவைகளுக்கு ஒப்பான ஒரு சொரூபத்தையாகிலும் யாதொரு விக்கிரகத்தையாகிலும் நீ உனக்கு உண்டாக்க வேண்டாம்; நீ அவைகளை நமஸ்கரிக்கவும் சேவிக்கவும் வேண்டாம்; உன் தேவனாகிய கர்த்தராகியிருக்கிற நான் எரிச்சலுள்ள தேவனாயிருக்கிறேன்."* (யாத்தி: 20:3-5). *"ஆகையால் நீ இஸ்ரவேல் வம்சத்தாரை நோக்கி; திரும்புங்கள்; உங்கள் நரகலான விக்கிரகங்களை விட்டுத் திரும்புங்கள்; உங்கள் சகல அருவருப்புகளையும் விட்டு உங்கள் முகங்களைத் திருப்புங்கள் என்று கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறார்."* (எசே.14:6).

புதிய ஏற்பாட்டு எழுத்தாளர்கள் தொடர்ந்து கூறும் போது,*"ஆதலால் புறஜாதிகளில் தேவனிடத்தில் திரும்புகிறவர்களைக் கலங்கப் பண்ணலாகாதென்றும், விக்கிரகங்களுக்குப் படைத்த அசுசியானவைகளுக்கும், வேசித்தனத்திற்கும், நெருக்குண்டு செத்ததிற்கும், இரத்தத்திற்கும், விலகியிருக்கும்படி அவர்களுக்கு நாம் எழுத வேண்டுமேன்றும் நான் தீர்மானிக்கிறேன்."* (அப்.15:19,20). *"பிள்ளைகளே நீங்கள் விக்கிரங்களுக்கு விலகி, உங்களைக் காத்துக் கொள்வீர்களாக. ஆமென்."* (1யோவா.5:21).

ஏவுதல் பெற்ற தேவ எழுத்தாளர்கள் விக்கிரகமும் அவைகளை பணிந்து கொள்வதும் அபத்தம் என காட்டுகின்றனர். அவர்கள் தேசம் விக்கிரகங்களாலும் நிறைந்திருக்கிறது; தங்கள் கைகளின் கிரியையும், தங்கள் விரல்கள் உண்டுபண்ணினதையும் பணிந்து கொள்கிறார்கள். சிறியவனும் குனிகிறான், பெரியவனும் பணிகிறான்; ஆகையால் அவர்களுக்கு

மன்னியாதிருப்பீர் (ஏசா.2:8,9). விக்கிரகங்களை உருவாக்கிறயாவரும் வீணர். அவர்களால் இச்சிக்கப்பட்டவைகள் ஒன்றுக்கும் உதவாது; அவைகள் ஒன்றும் காணாமலும்,ஒன்றும் அறியாமலும் இருக்கிறதென்று தங்களுக்கு வெட்கமுண்டாக அவைகளுக்குத் தாங்களே சாட்சிகளாயிருக்கிறார்கள். ஒன்றுக்கும் உதவாத தெய்வத்தை உருவாக்கி விக்கிரகத்தை வார்ப்பிக்கிறவன் எப்படிபட்டவன்?இதோ,அவனுடைய கூட்டாளிகளெல்லாரும் வெட்கமடைவார்கள், தொழிலாளர்கள் நரஜீவன்கள்தானே; அவர்கள் எல்லாரும் கூடிவந்து நிற்கட்டும்; அவர்கள் ஏகமாய் திகைத்து வெட்கப்படுவார்கள், கொல்லன் இரும்பைக் குறட்டால் இருக்கி,உலையிலே காயவைத்து, சுத்திகளால் அதை உருவாக்கி தன் புயபலத்தினால் அதைப் பண்படுத்ததுகிறான். பட்டினியாயிருந்து பெலனற்றுப் போகிறான்; தண்ணீர் குடியாமல் களைத்துப்போகிறான். தச்சன் நூல் பிடித்து,மட்டப் பலகையால் மரத்துக்குப் குறிபோட்டு,உளிகளால் உருப்படுத்தி, கவரசத்தினால் அதை வகுத்து,மனுஷ சாயலாக மனுஷ ரூபத்தின்படி உருவமாக்குகிறான். அதை கோவிலிலே நாட்டி வைக்கிறான். அவன் தனக்குக் கேதுருக்களை வெட்டுகிறான். ஒரு மருத மரத்தையாவது, ஒரு கர்வாலி மரத்தையாவது தெரிந்து கொண்டு, காட்டு மரங்களிலே பெலத்த மரத்தைத் தன் காரியத்திற்காக வளர்க்கிறான், அல்லது அசோக மரத்தை நடுகிறான், மழை அதை வளரச் செய்யும் மனுஷனுக்கு அவைகள் அடுப்புக்காகும்போது, அவன் அவைகளில் எடுத்து குளிர் காய்கிறான்.நெருப்பை மூட்டி அப்பமும் சுடுகிறான்.அதினால் ஒரு தெய்வத்தையும் உண்டு பண்ணி, அதைப் பணிந்து கொள்கிறான், ஒரு விக்கிரத்தையும் அதினால் செய்து,அதை வணங்குகிறான், அதில் ஒரு துண்டை அடுப்பில் எரிக்கிறான்,அதில் ஒரு துண்டினால் இறைச்சியை சமைத்துப்புசித்து, பொரியலைப் பொரித்து, திருப்தியாகி,குளிரும் காய்ந்து,ஆ,ஆ அனலானேன்; நெருப்பைக் கண்டேன் என்று சொல்லி;அதில் மீதியான துண்டைத் தனக்குவிக்கிர தெய்வமாகச் செய்து,அதற்கு முன் விழுந்து அதை வணங்கி, நீ என் தெய்வம்,என்னை இரட்சிக்க வேண்டும் என்று அதை நோக்கி மன்றாடுகிறான். அறியாமலும்,உணராமலும் இருக்கிறார்கள்; காணாதபடிக்கு அவர்கள் கண்களும், உணராதபடிக்கு அவர்கள் இருதயமும் அடைக்கப்பட்டிருக்கிறது.அதில் பாதியை அடுப்பில் எரித்தேன்;அதின் தழலின்மேல் அப்பத்தையும் சுட்டு, இறைச்சியை பொரித்துப் புசித்தேன்; அதில் மீதியான துண்டை நான் அருவருப்பான விக்கிரமாக்கலாமா? ஒரு மரக்கட்டையை வணங்கலாமா என்று சொல்ல, தன் மனதில் அவனுக்குத் தோன்றவில்லை; அம்மாத்திரம் அறிவும் சொரணையும் இல்லை.அவன் சாம்பலை மேய்கிறான்;வஞ்சிக்கப்பட்ட மனம் அவனை மோசப்படுத்தினது; அவன் தன் ஆத்துமாவை தப்புவிக்காமலும் என் வலது கையில் அபத்தம் அல்லவோ இருக்கிறதென்று சொல்லாமலும் இருக்கிறான்.(ஏசாயா.44:9-20).

இது சுத்த அபத்தம் என்பதைக் காட்ட தாவீது எழுதுகிறதாவது; *"எங்களுக்கு அல்ல, கர்த்தாவே, எங்களுக்கு அல்ல, உமது கிருபையினிமித்தமும், உமது சத்தியத்தினிமித்தமும், உம்முடைய நாமத்திற்கே மகிமை வரப்பண்ணும். அவர்களுடைய தேவன் இப்பொழுது எங்கு என்று புறஜாதிகள் சொல்வானேன்? நம்முடைய தேவன் பரலோகத்தில் இருக்கிறார்; தமக்குச்சித்தமான யாவையும் செய்கிறார். அவர்களுடைய விக்கிரகங்கள் வெள்ளியும் பொன்னும், மனுஷருடைய கை வேலையுமாயிருக்கிறது. அவைகளுக்கு வாயிருந்தும் பேசாது, அவைகளுக்குக் கண்களிலிருந்தும் காணாது, அவைகளுக்கு காதுகளிலிருந்தும் கேளாது. அவைகளுக்கு மூக்கிருந்தும் முகராது. அவைகளுக்கு கைகளிலிருந்தும் தொடாது அவைகளுக்கு கால்களிலிருந்தும் நடவாது; தங்கள் தொண்டையால் சத்தமிடவும் மாட்டாது. அவைகளைப் பண்ணுகிறவர்களும், அவைகளை நம்புகிற யாவரும் அவைகளைபோலவே இருக்கிறார்கள்."* (சங்.115:1-8) மீண்டும் புதிய ஏற்பாட்டில் நமக்குக் கீழ்வருமாறு பதிவேடு கூறுகிறது. *"அத்தேனே பட்டணத்தில்பவுல் அவர்களுக்காக காத்துக் கொண்டிருக்கையில் அந்த பட்டணம் விக்கிரகங்களால் நிறைந்திருக்கிறதைக் கண்டு தன் ஆவியில் மிகுந்த வைராக்கியமடைந்து"* (அப்.17:16) தொடர்ந்து *" ..... பவுல் மார்ஸ் மேடையின் நடுவிலே நின்று; எந்த விஷயத்திலும் நீங்கள் மிகுந்த தேவ பக்தியுள்ளவர்களென்று காண்கிறேன். எப்படியென்றால், நான் சுற்றித் திரிந்து உங்கள் ஆராதனைக்குரியவைகளைக் கவனித்துப் பார்த்தபொழுது, அறியப்படாத தேவனுக்கு என்று எழுதியிருக்கிற ஒரு பலிபீடத்தைக் கண்டேன். நீங்கள் அறியாமல் ஆராதிக்கிற அவரையே உங்களுக்கு அறிவிக்கிறேன்."* (அப்.17:22-23) மேலும் சொல்லும்போது, அவர் ஆராதிக்கிற தேவன் எல்லாவற்றையும் உண்டாக்கினவரும், அவர் கைகளினால் கட்டப்பட்ட கோவில்களில் வாசம் பண்ணுகிறதில்லை என்றும், அவருக்கு உணவோ தண்ணீரோ தேவையில்லை எனவும் சுட்டிக் காட்டுகிறார். மற்றொரு சமயத்தில் அவர், *"விக்கிரகங்களுக்கு படைக்கப்பட்டவைகளைப் புசிக்கிற விஷயத்தைப் பற்றி உலகத்தில் விக்கிரகமானது ஒன்றுமில்லை என்றும், ஒருவரேயன்றி வேறொரு தேவன் இல்லையென்றும் அறிந்திருக்கிறோம். வானத்திலும், பூமியிலும் தேவர்கள் எனப்படுகிறவர்கள் உண்டு; இப்படி அநேக தேவர்களும், அநேக கர்த்தாக்களும் உண்டாயிருந்தாலும், பிதாவாகிய ஒரே ஒரு தேவன் நமக்குண்டு, அவராலே சகலமும் உண்டாயிருக்கிறது; அவருக்கென்று நாமும் உண்டாயிருக்கிறோம்."* (1கொரி.8:4-6).

எனவே வேதம் விக்கிர ஆராதனையைக் கண்டிப்பதோடு, விக்கிர ஆராதனைக்காரர்கள் அனைவரும், பொய்யர்கள் போன்ற அநேகரும், நரகத்திலே தள்ளப்படுவார்கள் என்றும் சொல்லுகிறது. (வெளி.21:8). இன்னொரு புறம் பார்த்தால், வேதம் கூறுவது போலவே, இயற்கையும், பொதுஅறிவும் ஒரே தேவன் உண்டு என்பதை அறிவுறுத்துகின்றன. (எபேசியர்.4:6) அவர் ஆவியாயிருக்கிறார் (யோவா.4:24) நாம் அவருக்கே ஆராதனை செய்வோமாக. (1தெச.1:9).

J.C.CHOATE — J.C. சோட்

# பெயரைத் தரித்துக்கொள்ளுதல்

நம் ஒவ்வொருவருக்கும், நம்முடைய தனிப்பட்டப் பெயர்கள் முக்கியத்துவம் வாய்ந்தாக இருக்கிறது. "*திரளான ஐசுவரியத்தைப் பார்க்கிலும் நற்கீர்த்தியே தெரிந்து கொள்ளப்படத்தக்கது....*" *(நீதி.22:1)* சொல்லத்தகாத குற்றங்களைப் புரியும் இவ்வுலகின் முன், நம் குடும்பத்தைச் சேர்ந்த ஒருவர், நம் குடும்ப பெயரை அணிந்த ஒருவர், குற்றவாளியாகக் காணப்படு வாரானால், நாம் எவ்வளவு வெட்கப்படுவோம்!

தேவனுடைய நாமத்தைக்குறித்து சிந்தித்துப் பாருங்கள்! நித்திய காலத்திலிருந்து பரிசுத்தத்திற்கும், நன்மைக்கும், பரிபூரணத்திற்கும் விளங்குகிற அந்த நாமத்தை குறித்துச் சிந்தியுங்கள்! தேவனுடைய எந்த செயலினாலும், அவர் நாமத்தின் மீது ஒரு குற்றமோ, அதற்கெதிரான ஒரு காரியமோ ஒருகாலும் ஏற்பட்டதில்லை.

அந்த குற்றமில்லாத நாமத்தை எடுத்து, நமக்குக் கொடுத்து, நம்மை - (மனிதர்களுக்கு, பாவிகளுக்கு ஆனால் புதிய சிருஷ்டிகளுக்கு, அவருடைய பிள்ளைகளாய் பிறந்தவர்களுக்கு) ஏதோ பரம்பரை உரிமைபெற்றவர்களைப்போல் அணியக் கொடுத்தாரே அந்த உன்னதமான காரியத்தை நினைத்துப்பாருங்கள்.

இந்த கணத்திற்கு நாம் எவ்வளவு நன்றியுள்ளவர்களாக இருக்கவேண்டும்! கிறிஸ்தவன் என்கின்ற நாமத்தின் மேல் நம்முடைய நடக்கையால் ஒரு சிறிய அவதூறையும் கொண்டுவர விருப்பமற்றவர்களாக இருந்து,அதன் பரிசுத்தத்தை காக்க எவ்வளவு வைராக்கியமுடையவர்களாக இருக்க வேண்டும். தெய்வீக தன்மைக்கு பங்காளிகளாகும் குடும்பத்தில் ஒருவனாக, பேசுவதிலும், சிந்திப்பதிலும், செயல்படுவதிலும், நடக்கையிலும் எவ்வளவு ஜாக்கிரதையுள்ளவர்களாக இருக்க வேண்டும் என்பதை சிந்தித்து செயல்படுங்கள்.

பெட்டி சோட் **BETTY CHOATE**

பெண்கள் பகுதி

# பரிசுத்த ஆவியானவரால் நற்சாட்சி பெற்றவர்கள்

கிறிஸ்தவ உலகிலே அப்போஸ்தலனாகிய பவுலைப் பற்றி தெரியாதவர்கள் யாரும் இருக்கமாட்டார்கள் அப்.7:58-ல் நாம் வாசிக்கிறபடி பவுலினுடைய பெயர் **சவுல்** என்பதாகும். பவுல் சிலிசியா நாட்டுக்குத் தலைநகரமாகிய **தர்சு** என்னப்பட்ட ஊரிலே பிறந்தார். எருசலேமிலே கனம்பெற்ற நியாய சாஸ்திரியாகிய கமாலியேல் கொடுத்த போதனையை கற்றுக் கொண்டார். இந்த அப்போஸ்தலன் பவுல் மூன்று சுவிசேஷப் பிரயாணங்களை மேற்கொண்டார்.

அப்போஸ்தலன் பவுல் 13 நிருபங்களை எழுதினார்.அதில் தீமோத்தேயுவுக்கு எழுதப்பட்ட இரண்டு நிருபங்களிலும் பவுல் தேவையான அனைத்து ஆலோசனைகளையும் பரிசுத்த ஆவியானவரால் ஏவப்பட்டு தீமோத்தேயுவுக்கு அளிக்கிறார். விசுவாசத்தின் நான் பெற்ற உத்தம குமாரனாகிய தீமோத்தேயுவே என்று சொல்வதிலிருந்து பவுல் தீமோத்தேயுவின் மேல் வைத்திருக்கும் அன்பும் நம்பிக்கையும் வெளிப்படுகிறது. சின்ன ஆசியாவில் பிறந்தவனாகிய இவனுடைய தகப்பன் கிரேக்கன், தாய் யூத ஸ்திரி இவன் தாயாகிய ஐனிக்கேயாளும், பாட்டியாகிய லோவிசாளும் இவனைச் சிறுபிராய முதலே யூதருடைய வேத சாஸ்திரத்தில் நன்றாய் பழக்கி வந்தார்கள். பவுல் முதல்முறை லீஸ்திராவுக்கு வரும்போது இவனும் இவனுடைய தாயாரும் கிறிஸ்தவ மார்க்கத்துக்கு வந்ததாகத் தோன்றுகிறது.ஏனென்றால் பவுல் இரண்டாந்தரம் வரும்போது தீமோத்தேயு சபையில் பெயர் பெற்றவனாயிருந்தான்(அப்.16:1) இரண்டாம் சுவிசேஷப் பயணத்தில் இவனைத் தமக்குத் தோழனாக ஏற்படுத்திக்கொண்டார். (அப்.16:3) பவுலோடு சுவிசேஷவேலை செய்யும் பொருட்டு லீஸ்திராவிலுள்ள மூப்பர்களும், பவுலும் இவனைப் பிரதிஷ்டை செய்தார்கள். (1தீமோத்.4:14;2தீமோத்.1:6).

பவுல் மூன்றாம் பிரயாணம் பண்ணும்போது தீமோத்தேயு எபேசு பட்டணத்தில் பவுலோடு தங்கியிருந்து, பின்பு மக்கெதொனியாவுக்குப் போனான் (அப்.19:22). பவுல் ரோமாபுரியில் சிறைச்சாலையில் இருந்தபோது தீமோத்தேயுஅவருடன் இருந்தான்(பிலி.1:1;2:9, கொலோ.1:1; பிலே.1) பவுல் இரண்டாந்தரம் ரோமாபுரியில் சிறைச்சாலையில் இருக்கும்போது தீமோத்தேயுவைத் தன்னிடம் வரும்படி அழைத்தார்.

*(2.திமோத்.4:9,21)* இதற்கு பின்பு தீமோத்தேயு சிறைச்சாலையில் வைக்கப்பட்டான் *(எபி.13:23)*.

பிரியமானவர்களே,மேலே நாம் படித்த காரியங்கள் இளைஞன் தீமோத்தேயவைப்பற்றி ஓரளவு நமக்கு விளக்கியிருக்கும் என்று நம்புகிறேன்.

இந்த தீமோத்தேயுவுக்கு நிருபத்தை எழுதும்போதுதான் பரிசுத்த ஆவியானவர் பவுலைக்கொண்டு இப்படியாகக் கூறுகிறார்.*" **உன்னிலுள்ள மாயமற்ற விசுவாசத்தை நினைவு கூறுகிறதினால்,என் முன்னோர்கள் முதற்கொண்டு சுத்த மனச்சாட்சியோடே ஆராதித்து வரும் தேவனை நான் ஸ்தோத்திரிக்கிறேன். அந்த விசுவாசம் முந்தி உன் பாட்டியாகிய லோவிசாளுக் குள்ளும்,உன் தாயாகிய ஐனிக்கேயாளுக்குள்ளும் நிலைத்திருந்து;அது உனக்குள்ளும் நிலைத்திருக்கிறதென்று நிச்சயித்திருக்கிறேன்."*** *(2தீமோத்.1:4,5)*.ஒரு தீவிரமான ஊழியத்தை தீமோத்தேயு செய்தானென்றால், அதற்குக் காரணம் அவனுக்குள்ளிருந்த மாயமற்ற விசுவாசம். இந்த மாயமற்ற விசுவாசம் அவனுக்கு எப்படி கிட்டியது என்றால், அவனுடைய தாயாகிய ஐனிக்கேயாள் மூலம்தான்.ஐனிக்கேயள் தான் கர்த்தரிடத்தில் விசுவாசமாயிருந்ததை,தன் மகனுக்கும் ஊட்டி வளர்த்தாள். சிறுபிராய முதலே அவள் அவனுக்கு தேவன் மேல் வைக்கும் விசுவாசத்தை கற்றுக் கொடுத்ததினால் தான் அவன் இவ்வளவு சீக்கிரம் அப்போஸ்தலன் பவுலோடு சேர்ந்து, பலமாய் உபயோகப்படுத்தப்பட்டான். வாலிப வயதிலேயே சுவிசேஷப் பயணம் செய்ய முடிந்தது.

இன்றைக்குள்ள தாய்மார்கள் எத்தனைபேர் ஐனிக்கேயாளைப்போல் இருக்கிறோம். தேவன் மேல் விசுவாசம் வைப்பதற்குப் பதில் உலகத்திலும், உலகத்தில் உள்ள காரியங்களிலும் விசுவாசம் வைக்க நம் பிள்ளைகளுக்குச் சொல்லிக் கொடுக்கிறோம்.உலகக் கல்வி,ஞானம், அறிவு,கேள்வி இவைகளில் தன் மக்கள் சிறந்து விளங்க வேண்டும். பேரும், புகழும் பெறவேண்டும் என்றுதான் அநேக தாய்மார்கள் மனக்கோட்டை கட்டுகிறார்கள் தேவனுக்கடுத்த காரியங்களைத் தவிர மற்ற எல்லாமே இக்கால இளைஞர்களுக்குத் தெரிகிறது. விசுவாசமில்லாமல் பிள்ளைகள் வளர்ந்திருக்கிறார்களென்றால் அதற்கு காரணம் பெற்றோர் தான்; அதிலும் குறிப்பாக தாய்மார்கள் தான் காரணம்.

2 தீமோத் *3:15*-ல் கிறிஸ்து இயேசுவைப்பற்றும் விசுவாசத்தினாலே உன்னை .இரட்சிப்புக்கேற்ற ஞானமுள்ளவனாக்கத்தக்க பரிசுத்த வேத எழுத்துக்களை, நீ சிறுவயது முதல் அறிந்தவன் என்று உனக்குத் தெரியும் என பவுல் கூறுகிறார். சிறுவயதுமுதல் தீமோத்தேயு வேதத்தை நேசித்தான் , வாசித்தான். இவ்வாறு செய்ய வைத்தது அவன் தாய், நாமும் கூட நம் பிள்ளைகளை சிறுவயதுமுதற்கொண்டே வசனங்களை வாசிக்கச் செய்ய

வேண்டும். அது அவர்களுக்கு எதிர்காலத்தில் ஆசீர்வாதமுள்ளதாக அமையும்.சங்கீதக்காரன் கூறும்போது "*உம்முடைய கட்டளைகளை கைக்கொண்டிருக்கிறபடியால் முதியோர்களைப்பார்க்கிலும் ஞானமுள்ளவனாயிருக்கிறேன்.உம்முடைய சாட்சிகள் என் தியானமாயிருக்கிறபடியால் எனக்கு போதித்தவர்களெல்லாரிலும் அறிவுள்ளவானாயிருக்கிறேன்.*" *(சங்.119:99,100)* என்று கூறுகிறார். வேத வசனம் ஒருவனை ஞானவானக்குகிறது. இந்த இரகசியத்தை அறிந்து தான் ஐனிக்கேயாள் தன் மகனுக்கு வேதத்தை வாசிக்கக் கற்றுக்கொடுத்தாள் போலும்.

2தீமோத்தேயு:2:3-ல் "*நீயும் இயேசு கிறிஸ்துவுக்கு நல்ல போர் சேவகனாய் தீங்கநுபவி* " என்கிறார்.2தீமோத் 4:5 லும் தீங்கநுபவி என்று தீமோத்தேயுவிடம் கூறுகிறார். இவ்விதமாக ஒரு பக்குவமான,ஊழியனாக தீமோத்தேயு சிறந்து விளங்குகிறான்.துன்பத்தினுடே சென்று சுவிசேஷத்தை அறிவிக்கிறான்.சிறையில் அடைக்கப்படுகிறான். இப்படியெல்லாம் ஒரு நல்ல தீமோத்தேயுவை நாம் வேதத்தில் காணமுடிகிறதென்றால் அது அவன் தாயினுடைய முயற்சிதான்.

இந்த தாய்க்கு அந்த விசுவாசமானது அவளுடைய தாயாகிய லோவிசாளுக்குள் இருந்து வந்தது. தாய், பாட்டி ஆகிய இருவருக்குள்ளும் இருந்த விசுவாசம்தான் தீமோத்தேயுவை வல்லமையுள்ளவானாக மாற்றியது.

கிறிஸ்துவுக்குள் அருமையான தாய்மார்களே! நாமும் நம் பிள்ளைகளைத் தேவனுக்காக வளர்ப்போம் தேவனுக்கடுத்த காரியங்களுக்கு முதல் இடத்தை நம் பிள்ளைகள் கொடுக்கவேண்டும்.முதலாம் நூற்றாண்டில் ஓர்இளைஞன் தீமோத்தேயு விசுவாசமுள்ளவனாய் வாழ்ந்தானென்றால் இன்றைக்கும் 21ம் நூற்றாண்டில் வாழும் நாமும் நம் பிள்ளைகளை தீமோத்தேயுக்களாக வளர்க்க முடியும். சுவிசேஷத்தை, உண்மைச் சத்தியத்தைக் கூற, வேதாகமத்தில் உள்ள ஓரே சபையை உலகிற்கு பறைசாற்ற இளைஞர்கள் தேவை. நம் பிள்ளைகளைத் தேவனுக்காய் அர்ப்பணிப்போம். நாமும் ஐனிக்கேயாளைபோல் இருப்போம். ஐனிக்கேயாளும், லோவிசாளும் பரிசுத்த ஆவியானவரால் நினைவு கூறப்பட்டு வேதாகமத்தில் நற்சாட்சிப்பெற்றதுபோல நாமும் தேவனால் நினைவுகூறப்பட்டு நம் மக்களோடு பரலோகத்தில் தேவனோடு என்றென்றும் நிலைத்திருப்போம்.அப்படி வாழ தேவன் நமக்கு அநுக்கிரகம் செய்வாராக!

ரேச்சல் இராஜநாயகம்.

# தொடுத்துக்கொள்ளுங்கள்

ஆதியிலே அகிலமெல்லாம் ஆழியின் நீரால் பிரவாகித்திருக்கிறதைக் கண்ணுற்ற அழிவில்லா தேவன், தம் அநந்த ஞானத்தினால் ஜலத்தை ஓரிடத்தில் கூட்டி, ஓயாது ஆர்ப்பரிக்கும் அலைகொண்ட வாரிதியைத் தன் குமுறலின் சத்தத்தால் சிருஷ்டித்தார் என்பதை அறிந்தவர்களாய் இருக்கிற நாம், ஆழ்கடலின் நீரை மேலோட்டமாய் நோக்குகையில் அமைதியும், அமரிக்கையும் கொண்டதாய் காணப்படுமென்றாலும் அதில் ஆழம் நீர்சுழிகளால் நிறைந்திருக்கிறதுபோல, நம் வாழ்வையும் மேலெழுந்தவாரியாய் பார்க்கையில் எழில்மிகு தோற்றம் கொண்டிருந்தாலும் அதன் ஒவ்வொரு நொடியும் எதிர்பாராத நிகழ்வுகளால் நிறைந்திருக்கும் என்பது திண்ணம்.

கடலடியில் அபாயம் அதிகம் என்றபோதிலும் முத்துக் குளிக்கப் போகிறவன் மூச்சடக்க ஆயத்தம் ஆவதுபோல் நம்முடைய வாழ்வின் ஒவ்வொரு பகுதியையும் தைரியமாய் எதிர்கொள்ள நாமும் ஆயத்தமாகவேண்டியது அவசியம். தித்திக்கும் தேன்கூட்டைப்போன்ற வேதாகமத்தில் ஞானத் தேனமுதாம் நீதிமொழிகளில் ஞானி, ***"குதிரை யுத்தநாளுக்கு ஆயத்தமாக்கப்படும்; ஜெயமோ கர்த்தரால் வரும்"*** (நீதி.21:31) என்று இயம்பி இருக்கிறார். நம்முடைய பங்கான ஆயத்தத்தை நாம் சீராய்ச் செய்யும்போது, ஜெயவேந்தனாகிய தேவன் தம் பங்கை சரிரயாய்ச் செய்து நமக்கு வெற்றிக் கனியைத் தருகிறார் என்பதை உணர்ந்து கொள்வோம்.

## I .இளைஞர்களின் வாழ்விக்கு இன்றியமையாதது.

வாலிபம் என்பது வசந்த காலத்திற்கு ஒப்பானது,அது வசீகரமானதும் கூட, ஆனால் அதில் உள்ள ஒரு குறை என்னவென்றால், ஒவ்வொரு மணித்துளியும், வினாடியும் இந்த வாலிபத்தை வயோதிகம் வாகை சூடிக் கொண்டேயிருக்கிறது என்பது தான். நாம் வெண்முடி அணிந்தோராய் இவ்வுலகில் வலம் வரும் நாட்களில், நமது உடல் தளர்ந்தாலும், உள்ளத்தைத் தளரவிடாமல் நம் ஜீவியத்தில் நேர்கொண்ட பார்வையும் நிமிர்ந்த நடையும் போட இப்பொழுதே ஆயத்தமாக வேண்டியது, இளைஞர்களான நமக்கு இன்றியமையாததாய் திகழ்கிறது.

இளந்தளிர்களாக துளிர்விடும் நீங்கள், வாழ்க்கையின் அடித்தளமாகிய இப்பருவத்தில் கல்வியிலும்,பொது அறிவிலும் வளர்வதை முக்கிய மென்றறிவதோடு, கருவறையில் தொடங்கிய நம் வாழ்வு கல்லறையில் முற்றுதல் காணும் என்றெண்ணாமல், இறைவனிடம் இரவலாகப் பெற்ற நம் ஆவி அவரிடமே திரும்பும்(பிரசங்கி 12:7)என்றறிந்து, அப்படித் திரும்புகையில் அவ்வுலக ஜீவியத்திற்கு, நம் இவ்வுலக கிரியையே அடிப்படையாக இருக்கிறதென்பதையுணர்ந்து அதற்கேற்ப நம் ஆவிக்குரிய வாழ்வை இப்பொழுதே ஆயத்தமாக்குதல் அவசியம்.

பரிசுத்த தேவனோடிருந்த உறவை இழந்த மனிதனை மீட்டமைக்க வேண்டுமென்ற திட்டத்தை பிதா தன் ஆதீனத்தில் அவருடைய அநாதி தீர்மானத்தின்படியே ஆயத்தமாய் வைத்திருந்தார். (எபே.3:10;2:10). மனுக்குலத்திற்கு விமோசனத்தை விநியோகிக்கவும், விண்ணரசை இம்மண்ணில் விதைத்திட வந்த விண்ணவரின் முதலாம் வருகைக்கு வழியை ஆயத்தமாக்க, திருமுழுக்குநர் எனப்படும் யோவான் யூதேயாவின் வனாந்திரத்தில் பிரசங்கம் செய்தான்.(ஏசாயா 40:3; மல். 3:1-3; மத்.3:1-6). மனிதனுடைய மீட்பும்,அவனை மீட்கும் படியாய் வந்த மேசியாவின் வருகையும் பரமதேவனால் மனிதனுக்காக ஆயத்தம் செய்யப்பட்டிருந்தது.

சர்வத்துக்கும் மேலான சத்தியமுள்ள தேவன் மனிதனின் மீட்புக்காக அனைத்தையும் திட்டமிட்டு ஆயத்தம் செய்து வைத்திருந்தார் என்பதை அறிவோம். ஆதியிலே தேவனோடிருந்த நீதியின் ஆதவனாம், நித்திய தேவனின் நிகரில்லா மைந்தன் நரருலகில் சுற்றித் திரிந்த வேளையில் அவர் தாம் நவில்ந்த உவமைகளில் ஆக்கையும்,அறிவும், ஆவியும் உடையோர் ஆயத்தமாயிருத்தல் வேண்டும் என்பதை வலியுறுத்த பத்து கன்னியர் உவமையை,(மத்.25:1-12) உண்மையுள்ள ஊழியன் உவமையையும் (லூக்.12:47) எடுத்தியம்பினார்.

வாலிபர்களாகிய நாம் ஒவ்வொரு காரியத்திலும் ஆயத்தமாயிருப்பதற்கு முதற்படியாய் தேவனிடம் மன்றாடவேண்டியதவசியம்.ஆவலாய் எதிர்ப்பார்த்த பொதுத் தேர்வின் முடிவு கண்டு எதிர்கால வாழ்விற்கு ஏணிப்படிகள் அமைக்க இளைஞராகிய நீங்கள் எத்தனித்திருக்கையில்,முதலில் உங்கள் எண்ணங்களை பாரபட்சமில்லாத பரலோக தேவனிடம் தெரிவியுங்கள். குறைமதி கொண்டோராய் நாமெடுக்கும் முடிவைவிட நிறைமதி கொண்டவராம் அவர்சித்தம் நிறைவேறினால் நமக்கது சாலச்சிறந்ததாய் அமையும். ஆயத்தமாகிற நமக்கு முதலில் எக்காரியத்திற்காய் ஆயத்தமாகிறோம் என்ற தெளிவான அறிவு இருத்தால் வேண்டும். அந்த அறிவை அடிப்படையாய் வைத்து காரியங்களை திட்டமிடுதல் அவசியம் வேண்டும். இவ்விரண்டும் நம்மிடம் இருந்தால் நம்மால் சிறப்பாக ஒரு காரியத்திற்கு ஆயத்தமாக முடியும்.(லூக்.14:28-31).

## II. ஆயத்தத்தால் வரும் ஆதாயங்கள்

கிறிஸ்துவின் பாத்திரமாக தெரிந்தெடுக்கப்பட்ட அப்போஸ்தலனாகிய பவுல் தரணியில் அவருக்காய் தளர்ந்திடாமல் தியாகங்கள் பல புரிந்து சபைகளைத் கட்டினான்.அதிலொன்றான எபேசு பட்டணத்துக்கெழுதுகையில் கிறிஸ்துவுக்குள்ளான நாம் புரிய வேண்டிய வெம்போர் ஒன்று இருக்கிறது, அது மாம்சத்தோடும் ரத்தத்தோடுமல்ல, துரைதனத்தோடும்,அதிகாரங்களோடும் என்பதால் ஆயத்தமாய் இருத்தல் வேண்டும் என்பதை வலியுறுத்தினான்.(எபே.6:11-13).

கிறிஸ்துவுக்குள்ளாக திருமுழுக்கு பெற்ற அனைவரும்,கிறிஸ்துவின் சேனையில் பணிபுரிகிற சேவகர் என்பதால், போருடை அணிய வேண்டும் என்று அறைகூவல் விடுக்கும்போது, "***சமாதானத்தின் சுவிசேஷத்திற்குரிய ஆயத்தம் என்னும் பாதரட்சையைக் கால்களிலே தொடுத்தவர்களாயும்***" (எபே.6:15) என்கிறார். பவுலின் பரிந்துரையைக் கவனித்தீர்களா! ஆயத்தம் என்பது காலணி என்கிறார்.யுத்தம் புரியும்வேலையில் அங்குமிங்கும், எத்திக்கும் ஓடியும், நடந்தும் ஆர்ப்பரித்துப் போர்செய்ய வேண்டுமாதாலால் கால்களுக்கு பாதுகாப்பில்லையே என்ற ஏக்கமின்றி எங்கும் பறந்தோடி போர் புரியலாம்

ஆயத்தம் என்னும் படைகலனை நம் கால்களில் தொடுத்தவர் களாயிருந்தால், அறிவில் ஆகாயம்வரை வளர்ந்திருக்கிற இக்காலத்தின் ஜீவியத்தில் முன்னேற அநேக தடைகளைக் கடக்க வேண்டுமென்ற கிலி இல்லாமல் இருக்கலாம். ஆனால், அதைவிட ஆதிக ஆசீர்வாதம் என்னவென்றால் நாம் ஆவிக்குரிய ரீதியில் எஸ்றாவைபோல் இருதயத்தைப் பக்குவப்படுத்து வோமானால்(எஸ்றா.7:10) எசேக்கியாவிடம் தேவன் சொன்னதுபோல நாம் ஆயத்தப்படுவதோடு நில்லாமல் பிறரையும் பரமகானானின் வாழ்விற்கு ஆயத்தப்படுத்த முடியும்.(எசே.38:7)

பரிசுத்த ஆவியானவர் பேதுருவைக் கொண்டு எழுதினநிருபத்தில் "***..உங்களிடத்தில் விசாரித்துக் கேட்கிற யாவருக்கும் சாந்தத்தோடும் வணக்கத்தோடும் உத்தரவு சொல்ல எப்பொழுதும் ஆயத்தமாயிருங்கள்.***" *(1பேதுரு 3:15)* என்கின்றார். இவ்வசனத்திற்கேற்ப நம்முடைய நம்பிக்கையை குறித்து விசாரித்து கேட்பவர்களிடம் நாம் எப்பொழுதும் ஆயத்தமாயிருந்தால் சுவிசேஷத்தின் பேரொளியைப் படரச்செய்யலாம்.அப்படி படரச்செய்வதில் மூலம் பரமனின் படையில் அநேகரை வழிநடத்தகிற தளபதிகளாகும் சிலாக்கியத்தை இந்த இளம் பிராயத்திலேயே நாம் பெறுவோம் என்பதில் ஐயமேதுமில்லை.

இளைஞர்களாகிய நாம் முன்மதியற்ற கன்னிகைகளைப்போல் ஆயத்தப்படாதவர்களாயிராமல், நம் வாழ்வில் நிகழும் ஒவ்வொரு காரியத்திற்கும், அதை விட மேலாக நம் ஆண்டவரின் இரண்டாம் வருகையில் நாம் உண்மையுள்ள ஊழியக்காரனாக **பாதரட்சை எனும் ஆயத்தத்தை தொடுத்துக்கொண்ட** மக்களாய் அவரை சந்திக்க எத்தனிப்போம். இந்தக் காரியத்தில் நீங்கள் வெற்றிவாகை சூட தேவன் தாமே உங்களுக்கு இரக்கம் செய்வராக!

**ஜே. பிக்கின்ஸ்**

## பழைய ஏற்பாட்டின் ஆசாரியர்கள் தேவனுக்கு விரோதமாகச் செய்த காரியங்கள்

1. ஆசாரியர்கள் ஜனங்களின் பாவத்தைத் தின்று பிழைப்பு நடத்தினர்(ஓசி. 4:8)
2. அவர்கள் தங்களுக்குப் போதிய அறிவு இல்லாமையினாலே பாவஞ்செய்தார்கள் (ஓசி 4:6)
3. பரிசுத்தத்திற்கும்,அசுத்தத்திற்கும் உள்ள வித்தியாசத்தை காண்பியாமற்போனர்கள் (எசே.22:26)
4. மேலும், ஆசாரியர்கள் மனப்பூர்வமாக உபதேசிக்காமல், கூலிக்காக உபதேசம்பண்ணினார்கள்.(மீகா.3:11)

# லேவியராகமம் ஒரு கண்ணோட்டம்

I. பொருள் : ஆசாரியரின் பிரமாணம்

II. ஆசிரியர் : மோசே

III. காலம் : ஏறக்குறைய கி.மு. 1400

IV. முக்கிய வார்த்தை : பரிசுத்தம் (87 முறை)

V. இந்நூல் பற்றி:

**a.** தேவனுடைய அன்பும், இரக்கமும் அவருடைய பாவ விமோசன திட்டத்தில்வெளிப்படுகிறது.

**b.** லேவியராகமம் இப்பொழுதுதான் அர்த்தமுடையதாயிருக்கிறது, ஏனெனில் இயேசுவே இப்புத்தகத்தில் இடம் பெற்றிருக்கிற பலிகள், ஆசாரியத்துவம் மற்றும் நியமங்களின் நிறைவேறுதலாயிருக்கிறார்.

VI. பிற தகவல்கள்

**a.** லேவியராகமம், தெரிந்தெடுக்கப்பட்ட மக்களின் சமுதாயம் மற்றும் பக்தி வாழ்க்கைக்கான, அடிப்படைச் சட்டங்கள் பற்றிய தேவனுடைய அறிவுரையாயிருக்கிறது.

**b.** லேவியராகமம், எபிரேய தேசம், கர்த்தருக்காகப் பிரித்தெடுக்கப் பட்ட ஜன்மென்று அடையாளப்படுத்துகிறது.


**c.** லேவியராகமம் வரலாற்றுச் சம்பவங்களின் விரிவுரையாயிராமல் தேசத்தின் வாழ்க்கையை வழிநடத்தக் கூடிய சட்டங்களின் தொகுப்பாயிருக்கிறது.

**d.** இந்த சட்டங்கள் கொடுக்கப்பட்டபோது இஸ்ரவேல் மக்கள் சீனாய் மலையில் தான் இருந்தார்கள்.

**e.** இந்தப் புத்தகம் முழுதும் தீர்க்கதரிசன அடையாளங்களினால் நிறைந்திருக்கிறது. கிறிஸ்துவிலும், அவருடைய சபையிலும், நிறைவேறுகிற மற்றும் பொருள்கொண்ட மாதிரிகளையும் தகவல்களையும் கொண்டுள்ளது.

*எச்சரிக்கை:* இந்த புத்தகத்தில் காணப்படுகிற மாதிரிகளையும் அடையாளங்களையும் தவறாகப் பிரயோகிக்கக்கூடாது. புதிய ஏற்பாட்டு எழுத்தாளர்களினால் பயன்படுத்தப்படாத புதிய காரியங்களைக் கற்பனை செய்யவும் கூடாது.

# வெளிப்படுத்தின விசேஷம்



**அதிகாரம்.3:7-22**

வெளி.43-7-ல், பிலதெல்பியா சபைக்கு இயேசு தன்னை பரிசுத்தமுள்ளவரும் சத்தியமுள்ளவரும், தாவீதின் திறவுகோலை உடையவரும்,ஒருவரும் பூட்டக்கூடாதபடிக்குத் திறக்கிறவரும், ஒருவரும் திறக்கக்கூடாதபடிக்கு பூட்டுகிறவருமாயிருக்கிறார் என்று அறிமுகப்படுத்துகிறார். இந்த வார்த்தைகள், நீதியுள்ள பிலதெல்பியா சபையினருக்கு பெருத்த ஊக்கமூட்டக்கூடியதாக இருந்திருக்கும். அதைப்போலவே எக்காலத்திலுமுள்ள உண்மையுள்ள எல்லா கிறிஸ்தவர்களுக்குமே இருக்கும். உண்மையுள்ள கிறிஸ்தவர்கள் கர்த்தர் நிமித்தமாக, உபத்திரவங்களைச் சகிக்க வேண்டும். *(அப்.14:22).* அவைகளிலிருந்து கர்த்தர் விடுவிப்பார் என்ற வாக்குத்தத்திலும், நித்திய பலனிலும் மிகுந்த நம்பிக்கையுடையவர்களாயிருக்க வேண்டும். *(2.கொரி.1:9-10)* இயேசு பரிசுத்தமுள்ளவரும், சத்திய முள்ளவரும் என நமக்கு நினைவுப்படுத்துகிறார். ஆகையால், நாம் அவரைப் பின்பற்றினால், நம்மைப் பாதுகாத்து, நமது ஆத்துமாவை இரட்சிப்பதில் அவர் தோற்றுப்போகமாட்டார். அதுமாத்திரமல்ல, தாவீதின் திறவுகோலையும், ஒருவரும் எதிர்க்கக்கூடாத வல்லமையு முடையவரா யிருக்கிறார். ஆகையால், கர்த்தர், நம்மைப் பாதுகாக்கச் சித்தமுடைய வராகவும், தம்முடைய வாக்குத்தத்தத்தை நிறைவேற்றக் கூடியவராக மாத்திர மல்லாமல், அவைகளைச் செய்யும் வல்லமையுடை யவராக்வும் இருக்கிறார்.

வசனம்-8-ல்,அவர்களுடைய கிரியைகளை தான் அறிந்திருப்பதாகக் கர்த்தர் சொல்லுகிறார். இப்படிச் சொல்லுவது, பிலதெல்பியா சபைக்கு எச்சரிப்பாக இல்லாமல், ஆறுதலாக உள்ளது. இந்த சபையைக் குறித்து தீதாகச் சொல்லுவதற்கு கிறிஸ்துவிடம் ஒன்றுமில்லை.அவர்களுடைய நீதியான கிரியைகளை அவர் மறக்கவுமில்லை. இச்சபையாரின் பெலனுக் காகவும்,அவருடைய பொறுமையின் வசனத்தைக் கைக்கொள்வ தற்காகவும், அவருடைய நாமத்தை மறுதலியாமலிருப்ப தற்காகவும், யூதருடைய துன்புறுத்துதலை சகித்துக் கொள்வதற்காகவும், இயேசு அவர்களை மெச்சினார்.கிறிஸ்து இக்கிரியைகளைஅறிந்திருக்கிறார். ஆகையால்,அவர்களுக்கு முன்பாக,ஒருவரும் பூட்டக்கூடாத ஒரு திறந்த வாசலை வைத்தார். வசனம்-11ல் அவர்களுக்குள்ளதை அவர்களை தொடர்ந்து பற்றிக்கொண்டிருந்தால்,அவர்களுக்கு கிரீடத்தை வைத்துள்ளார். அவர்களுக்காக கிறிஸ்து ஆயத்தம் செய்து வைத்துள்ளதை

தடுத்து நிறுத்தும் வல்லமை எந்த ஒரு மனிதனுக்கும் இல்லை. இப்படிச் சொல்லுவதால், இது ஒருமுறை இரட்சிக்கப்பட்டவன்,எப்பொழுதும் இரட்சிக்கப்பட்டவன் என்ற கொள்கைகளைப் போதிப்பதாகாது. பிலதெல்பியா சபையார் தங்களுடைய செயல்களால், கிரீடம் எடுத்துப்போடப்படுவதற்கு அனுமதிக்கமுடியும். ஆனால், தங்களுடைய நீதியில் உறுதியாயிருந்தால்,ஒருவனாலும்,எடுத்துப்போடமுடியாது.

வசனம்-9ல், எப்படி சிமிர்னா சபையார் யூதர்களின் கைகளில் பாடுபட்டார்களோ அதுபோல பிலதெல்பியா சபையாரும் பாடுபட்டார்கள் என்றுள்ளது. இந்த வசனத்தில்,யார் இன்றைக்கு உண்மையான யூதன் என்று கர்த்தர் தெளிவுப்படுத்துகிறார். சரீரப்பிரகாரமான இஸ்ரவேலை தேவன் இனி ஒருபோதும் அங்கீகரிப்பதில்லை.பழைய பிரமாணம் சரீரப் பிரகாரமான இஸ்ரவேலிடம் இருந்தது.(உபா.5:1-3)புதியபிரமாணத்தில், கிறிஸ்தவர்கள் ஒரு ஆவிக்குரிய தேசம்.(1.பேதுரு 2:5,9,12).ஆவிக்குரிய யூதர்கள் (ரோமர்.8:28,29)மற்றும் தேவனுடைய இஸ்ரவேலர்கள் (கலா.6:14-16) ஆவிக்குரிய இஸ்ரவேல் என்பது சரீரப்பிரகாரமான புறஜாதிகளையும் உள்ளடக்கியது.(ரோமர்.4:11-13; 9:6-8;10:24-25,1பேதுரு2:9-12). புதிய ஏற்பாட்டின்படி, கிறிஸ்தவர்கள் மாத்திரமே உண்மையான யூதர்கள், கிறிஸ்துவை விசுவாசிக்காத,சரீரப்பிரகாரமான யூதர்கள் உண்மையான யூதர்கள் அல்ல.அவர்கள் யூதர்கள் என்று சொல்லுகிறார்கள்.ஆனால், அது பொய்.அவர்கள்,உண்மையில் சாத்தானின் ஜெப ஆலயம் என்று இயேசு சொல்லுகிறார். பிலதெல்பியரைத் துன்பப்படுத்தின அந்த யூதர்களை, கர்த்தர், பிலதெல்பியரின் பாதங்களுக்கு முன்பாக வந்து பணிந்து, பிலதெல்பியரில் கர்த்தர் அன்பாயிருக்கிறதை அவர்கள் அறிந்து கொள்ளும்படி செய்வேன் என்று வாக்குத்தந்தார். இங்கே பிலதெல்பியர் பணிந்து கொள்ளப்படுவார்கள் என்று சொல்லவில்லை. மாறாக, பணிந்து கொள்ளுதல் அவர்கள் பாதங்களுக்கு முன்பாக நடக்கும் என்றுதான் சொல்லுகிறது. இது எப்பொழுது நிறைவேறும் என்று கிறிஸ்து சொல்லவில்லை.ஆனால்,இது, நியாயத்தீர்ப்பின் நாளில் எல்லா அவிசுவாசிகளும் கிறிஸ்துவுக்கு முன்பாகப் பணிந்து,அவருடைய நாமத்தை அறிக்கை செய்து, அவருடைய பிள்ளைககளால் செய்யப்பட்ட நற்கிரியைகளுக்காக தேவனை மகிமைப்படுத்தும்போது நிறைவேறக்கூடும்.(ரோமர்.14:10-12;பிலி.2:9-11; 1.பேதுரு.2:12) அந்நாளில் எல்லா அவிசுவாசிகளும் இயேசு கிறிஸ்து யாரென்று அறிந்து கொள்வார்கள்.

பிலதெல்பியா சபைக்கும், சிமிர்னா சபைக்கும் பல ஒற்றுமைகள் உண்டு. இரண்டுமே யூதர்களால், துன்புறுத்தப்பட்டவை. இரண்டுக்குமே நித்திய ஜீவனுக்கான கிரீடம் வாக்குத்தத்தம் செய்யப் பட்டது.ஆசியாவிலிருந்த சபைகளில், இந்த இரண்டுதான் எந்தவொரு காரியத்தினிமித்தமும் கடிந்து கொள்ளப்படவில்லை. ஆனால், இந்தக் கடிதங்களை அவர்கள் பெற்றுக்கொண்டபோது,அவர்கள் ஆவிக்குரிய வளர்ச்சியில் பெற்றுக்கொண்ட நிலையில், சிறிது வேறுபாடு காணப்பட்டது.

பாடுகளின் நோக்கம்,ஒருவன் பூரணத்தை பெற்றுக்கொள்ளும்படியாகச் செய்வது தான். (யாக்1:2-4: 1.பேதுரு.1:6-9,எபி.2:10; 5:8-9,ரோமர்.8:28-29 2.கொரி.13:11;எபே.4:11-13, பிலி:2:5-8;கொலோ.1:27,28 3:10; 2தீமோ.3:16,17, பேதுரு.2:21,4:1-2; 5:10;1.யோவா2:5-6; 4:17). பவுலுடைய மரணத்துக்கு முன்பாக,அவர் ஓட்டத்தை முடித்தார். (இப்பொழுது அவர் கிறிஸ்துவைப் போல பூரணமாக உள்ளார்). நீதியின் கிரீடம் அவருக்காக வைக்கப்பட்டிருக்கிறது.(2.தீமோ.4:7-8).

பிலதெல்பியா சபைக்கும், சிமிர்னா சபைக்குமுள்ள வேறுபாடு யாதெனில், சிமிர்னா சபையானது கடுமையான உபத்திரவங்களைச் சந்திக்க வேண்டியிருந்தது.(வெளி.2:10) ஆனால், பிலதெல்பியா சபை, உபத்திரவங்களிலிருந்தும், சோதனைகளிலிருந்தும் தப்புவிக்கப் பட்டது. (வெளி.3:10).அதாவது, சிமிர்னா சபையானது, இன்னும் பூரணப்படாமல், தனது இலக்கை அடைவதற்கு முன்பாக இன்னும் கொஞ்சம் பாடுகள் அதற்கு தேவைப்பட்டது. பிலதெல்பியா சபையார் 2தீமோ.4:7-8ல் உள்ள பவுலைப் போலிருந்தார்கள். அவர்கள் ஏற்கனவே ஓட்டத்தை முடித்ததால், கிரிடம் அவர்களுக்காக வைக்கப்பட்டிருந்தது. சிமிர்னா சபையார், கிரிடத்தை பெற்றுக்கொள்ளும்படி, உண்மையுள்ளவர்களாயிருக்கும்படி உனக்குள்ளதைப் பற்றிக்கொள் என்று சொல்லப்பட்டார்கள்.(வெளி.3:11). பிலதெல்பியருக்கு உபத்திரவம் அவசியமில்லையாதலால், அவர்கள் அதிலிருந்து காக்கப்பட்டார்கள். ஆனால், சிமிர்னா சபையாருக்கு அதுஇன்னும் தேவைப்பட்டது. இது நுட்பமான அதேசமயம் முக்கியமான ஒரு கருத்து.

வசனம்-12-ல் கர்த்தர் இன்னுமொரு மகத்தான வாக்குத்தத்தைக் கொடுக்கிறார். ஆசியாவிலுள்ள சபைகளுக்கு கொடுக்கப்பட்ட மற்ற வாக்குத்தத்தங்களைப்போலவே, இந்த வாக்குத்தத்தமும் ஜெயங்கொள்ளு கிறவர்களுக்கு மாத்திரமே. இந்த வாக்குத்தத்தம், தேவனுடைய ஆலயத்தில் ஒரு தூணாக இருக்கும்படி கொடுக்கப்பட்டுள்ளது. இது கர்த்தருடைய வாக்குத்தத்தமாக இருந்தாலும், நாம் பரலோகத்தில் தூணாக மாறமுடியும் என்பது எண்ணுவதற்கு அப்பாற்பட்டதாக உள்ளது. அதினின்று அவன் ஒருக்காலும் நீங்குவதில்லையென்றும் இயேசு சொல்லுகிறார். நாம் பரலோகத்தில் நுழைந்துவிட்டால், அது நமக்கு என்றென்றைக்குமான வாசஸ்தலமாக இருக்கும். அதைவிட்டு நாம் ஒருபோதும் வெளியேறமாட்டோம். கர்த்தர் தேவனுடைய நாமத்தையும் புதிய எருசலேமாகிய தேவனுடைய நகரத்தின் நாமத்தையும் அவருடைய புதிய நாமத்தையும் நம்மேல் எழுதுவார். என்ன அருமையான வாக்குத்தத்தங்கள்; ஆனால், இந்த நித்திய ஆசீர்வதாங்களைப் பெற்றுக்கொள்வதற்கு நாம் ஜெயங்கொள்ளவேண்டும். ஆவியானவர் சபைக்களுக்குச் சொல்லுகிறதைக் காதுள்ளவன் கேட்கக்கடவன்(3:13)

வெளி.3:14-ல், லவோதிக்கேயா சபைக்குத் தன்னை. உண்மையும் சத்தியமுமுள்ள சாட்சியும், தேவனுடைய சிருஷ்டிக்கு ஆதியுமாயிருக்கிற ஆமென் என்பவர் என்று விவரிக்கிறார். இந்த நிருபத்தில் லவோதிக்கிகேயா சபையாருக்குக் கொடுக்கப்பட்ட கடுமையான எச்சரிப்போடு இந்த அறிமுகம் தொடர்புடையதாயிருக்கிறது. இயேசு சிருஷ்டிகராக தன்னுடைய அதிகாரத்தை வலியுறுத்துகிறார். அவர் உண்மையும் சத்தியமுமுள்ளவராக இருக்கிறார். அதைப்போலவே, மனந்திரும்பாதவர்களுக்கு எதிராக அவருடைய நியாயத்தீர்ப்பு இருக்கும்(வெளி.19:11). அவர்ஆமென் என்பவராக உள்ளார். அதன் பொருள் அவர் சொல்லுகிறபடி எல்லாம் இருக்கும். ஆகவே லவோதிக்கேயர்கள் கிறிஸ்துவின் அதிகாரத்தை அங்கீகரித்து, மனந்திரும்ப அவசியமிருந்தது. வெளிப்படுத்தலுக்கான நமது பின்னணி பாடத்தில், யெகோவா சாட்சி பிரிவுக் கூட்டத்தார், இந்த வசனத்திலிருந்து போதிக்கும் தவறான கொள்கை பற்றி விவாதித்தோம். யெகோவா சாட்சிக்காரர்கள் இயேசு நம்மைப் போலவே சிருஷ்டிக்கப்பட்டவர் என்று விசுவாசித்துப் போதிக்கின்றனர். கிறிஸ்துவை பற்றியதாக தவறான கொள்கைக்கு ஆதாரமாக இவ்வசனத்தைப் பயன்படுத்துகின்றனர். வெளி.3:14-ல் ஆதியுமாயிருக்கிறவர் என்பது ஆர்கே என்ற கிரேக்க வார்த்தையிலிருந்து மொழி பெயர்க்கப் பட்டுள்ளது. இச்சந்தர்ப்பத்தில் இதன் பொருள் இயேசு சிருஷ்டிப்பின் செயல் காரணமாக இருந்தார் என்பது. பின்னணிப்பாடத்தில் நாம் குறிப்பிட்டது போல, இதே கிரேக்க வார்த்தை வெளி.22:13 -லும் இடம் பெற்றுள்ளது. அங்கே இயேசு தன்னை ஆதியும் அந்தமும் என்று கூறுகிறார். ஆதி என்பது உண்மையில் ஆரம்பத்தைக் குறிக்கிறதெனில் அந்தம் என்பது முடிவைக் குறிக்கிறதாக காட்டுகிறது. ஏனெனில் எந்த மனிதனுக்கும் முடிவில்லை. எல்லா மனிதர்களும் பரலோகத்திலோ அல்லது நரகத்திலோ என்றென்றும் வாழ்வர். இயேசு நித்தியமானவர் என்பதைக் காட்டுவதற்கான வார்த்தைதான் தெளிவாக பயன்படுத்தப்பட்டுள்ளது. இது யெகோவா சாட்சிகாரர்களின் உபதேசத்திற்கு நேர்மாறானது. வெளி.3-ம் அதிகாரமானது, இயேசு தன்னை, உலகத்தை ஆளும் அதிகாரமுடைய ஆமென் என்பவர் என்றும், சிருஷ்டிகர் என்றும் சொல்லி, லவோதிக்கேயரின் கவனத்தைத் தன்பக்கம் ஈர்த்து, மனந்திரும்பச் செய்யும்படி முயற்சிக்கிறாரேயொழிய, லவோதிக்கேயர்களைப் போலவே, தானும் ஒரு மனிதன் என்று இயேசு கண்டிப்பாகச் .சொல்லவில்லை. அப்படிச் சொல்லியிருப்பாரானால், லவோதிக்கேயர் அவருக்குச் செவிகொடுக்கும் வாய்ப்பு குறைவாகவே இருந்திருக்கும். மனிதனைப்போல, இயேசு சிருஷ்டிக்கப்பட்டவர் அல்ல. கிறிஸ்துவினுடைய புறப்படுதல் அநாதி நாட்களாகிய பூர்வத்தினுடையது என்று வேதாகமம் கூறுகிறது. (மீகா.5:2)

வசனம்-15ல் லவோதிக்கேயர்களின் கிரியைகளை இயேசு அறிந்திருந்தார் என்றும் அது நன்றாக இல்லை என்றும் அறிகிறோம். சர்தை சபையைப் போலவே, லவோதிக்கேயர்களை கர்த்தர் எதற்குமே பாராட்டவில்லை. அனலுமின்றி, குளிருமின்றி வெதுவெதுப்பாயிருப்பதற்காக

கர்த்தர் அவர்களைக் கடிந்து கொண்டார். வசனம்-16ல் இதினிமித்தம் அவருடைய வாயிலிருந்து அவர்களை வாந்தி பண்ணிப்போடுவேன் என்கிறார். வசனம்.17, இந்த லவோதிக்கேயர்கள் சுய திருப்தியுள்ளவர்களென்றும் தங்களுக்கு எந்தக் குறைவுமில்லையென்ற எண்ணத்துடன் இருந்தவர்களென்றும் சொல்லுகிறது. தங்கள் உலக ஐசுவரியத்தில் அவர்கள் நம்பிக்கை வைத்திருந்தனர். ஆனால், உண்மையில் அவர்கள் ஆவிக்குரிய ரீதியில் மிகுந்த ஏழ்மையில் இருப்பதை அறியாமலிருந்தார்கள். பரிதபிக்கப்படத்தக்கவர்களும், தரித்திர்களும், குருடர்களும் நிர்வாணமுமுள்ளவர்கள். சிமிர்னாவிலிருந்த சபைக்கு நேர் எதிரானவர்கள்.சிமிர்னர் ஐசுவரியவான்கள் (வெளி.2:9)பொதுவாகவே,உலக ஐசுவரியமுள்ளவர்கள், தங்கள் ஆஸ்திகளை நேசித்து அதில் நம்பிக்கை வைக்கிறபடியால், தேவனை நேசிக்கமுடியாது.(1தீமோ.6:6-11,17:1 யோவா 2:15-17;மத்.6:24).உலக ஐசுவரியமுள்ளவர்கள் தேவனுடைய இராஜ்ஜியத்தில் பிரவேசிப்பதைப் பார்க்கிலும்,ஒட்டகமானது ஊசியின் காதிலே நுழைவது எளிதாயிருக்குமென்று இயேசு எச்சரிக்கிறார் (மத்.19:23-24).இதிலிருந்து நாம், உலக ஐசுவரியத்தை நேசித்து அதைத் தேடக்கூடாது என்ற பாடத்தை கற்றுக்கொள்ளுகிறோம். மேலுமாக, நாம் ஆவிக்குரிய ரீதியில், நமக்கு நாமே ஒருபோதும் திருப்தி பட்டுக்கொள்ளக்கூடாது. முயற்சித்து வளர்ந்து கர்த்தரை மேலும் மேலுமாக பிரியப்படுத்த வேண்டிய அவசியம் எப்பொழுதும் நமக்கு உண்டு. (1கொரி.8:2,9:24-27, 2.பேதுரு 3:18).நம்மை வளரச் செய்வதற்கு எப்பொழுதும் வாய்ப்புண்டு.வசனம்-18ல் நெருப்பிலே புடமிட்ட பொன்னை, அவரிடத்திலிருந்து வாங்கும்படியாக ஆலோசனை சொன்னார். இந்த ஆவிக்குரிய தங்கம் என்பது, சோதனை உபத்திரவம் என்ற நெருப்பின் மூலம், நம்முடைய விசுவாசத்தை சுத்திகரிப்பதாகும். (சகரியா13:9; மல்.3:2-3; 1பேது.1:6-7).அந்த வகையில் தான் நாம் ஆவிக்குரிய நிலையில் ஐசுவரியவான்களாகிறோம். இயேசு வெண்வஸ்திரம் தருகிறேன் என்கிறார். இப்புத்தகத்தின், பின்னால், அது பரிசுத்தவான்களின் நீதி என்றழைக்கப்படுகிறது.(வெளி.19:8)மேலும், அவர்கள் ஆவிக்குரிய பார்வையைப்பெற்றுக்கொள்வதற்காக கண்களுக்கு கலிக்கம் தருகிறேன் என்கிறார். இந்த ஆவிக்குரிய பார்வை, தேவனுடைய வார்த்தைகளைக்கேட்டு, அதைப் புரிந்து கொள்வதினால் மாத்திரமே கிடைக்கும்.(மத்.13:16,23).

வெளி.3:19-ல் பாவத்திலிருப்பவர்களைக் கடிந்துகொள்வது, அன்பின் செயல்பாடேயொழிய,வெறுப்பதினாலல்ல என்று தெளிவுப்படுத்துகிறார். நான் நேசிக்கிறவர்கள் எவர்களோ அவர்களைக் கடிந்துகொண்டு சிட்சிக்கிறேன் என்ற இயேசு சொல்லுகிறார். உண்மையைச் சொல்பவர்களை சில மனிதர்கள் வெறுப்பார்கள்.(நீதி.9:8,15:12:யோவர.7:7: கலா.4:16).ஆனால், ஞானமுள்ளவன் கடிந்துகொள்பவனைச் சிநேகிப்பான். "*மறைவான சிநேகித்தைப் பார்க்கிலும் வெளிப்படையான கடிந்துகொள்ளுதல் நல்லது*" (நீதி.27:5). தன் அயல்லானை நேசிப்பவன், அவர்கள் பாவத்திலிருப்பதைஅனுமதிக்கமாட்டான். மாறாக அவர்களைக் கடிந்து கொள்ளுவான் என்று தேவன் போதிக்கிறார். (வெளி.19:17,18). இது அன்போடும்,சாந்தத்தோடும் செய்யப்பட வேண்டும்.

*(எபேசி.4:15,கலா.6:1, 2தீமோ. 2:24-26)* ஆனால், பாவத்திலிருப்பவர்களை அன்போடு அறிவுறுத்துவது அன்பில்லாத தன்மை என்று நாம் ஒருபோதும் நினைக்க கூடாது. சீர்ப்படுத்துதல் தேவைப்படும்போது அதைக் கொடுப்பதும், பெற்றுக்கொள்வதும் நமது கடமை.கடிந்து கொள்ளுதலின் நோக்கம் மனந்திரும்புதலைக் கொண்டுவருவது தான்.நீ,ஜாக்கிரதையாயிருந்து மனந்திரும்பு என்று லவோதிக்கேயர்களுக்கு இயேசு சொன்னார்.

வெளி.3:20-ன் படி இயேசு ஒவ்வொரு கதவையும் தட்டுகிறார். ஒருவன் என் சத்தத்தைக் கேட்டு,கதவைத் திறந்தால்,அவனிடத்தில் நான் பிரவேசித்து, அவனோடு போஜனம் பண்ணுவேன் என்று இயேசு சொல்லியுள்ளார்.அவர் ஒவ்வொருவரையும் நேசிக்கிறபடியால் ஒவ்வொரு தனிப்பட்ட ஆத்துமாவிற்கும் அவர் தருணத்தையும், இரட்சிக்கப்படும்படியான அழைப்பையும் தருகிறார். கிறிஸ்துவினிடத்தில் சாதிமுறையோ அல்லது தீண்டாமை என்பதோ கிடையாது.எல்லா மனிதரும் சத்தியத்தை அறியும் அறிவை அடைந்து மனந்திரும்பி இரட்சிக்கப்படவேண்டுமென்றே தேவன் விரும்புகிறார் . *(1.தீமோ2:4,2.பேதுரு3:9)* யார் வேண்டுமானாலும் அவரிடத்தில் வரலாம். *(வெளி.22:17).*

லவோதிக்கேயர்களுக்கு எழுதப்பட்ட நிருபம், கிறிஸ்துவுடனே அவருடைய சிங்காசனத்தில் உட்காரமுடியும் என்ற வாக்குத்தத்தத்தோடே முடிகிறது(வெளி.3:12).ஆனால் மீண்டுமாக இந்த வாக்குத்தத்தம் ஜெயங்கொள்ளுகிறவர்களுக்குதான். இந்த வசனம் இயேசுவானவர் ஜெயங்கொண்டதைப்போல, நாம் ஜெயங்கொள்ள வேண்டுமென்று போதிக்கிறது. இயேசு எப்படி ஜெயங்கொண்டார்? இயேசு, தேவனுடைய வார்த்தைகளின்படி கீழ்ப்படிதலுள்ள விசுவாசத்தோடு ஒவ்வொரு சோதனையையும் மேற்கொண்டார்(மத்.4:1-10).அதைப்போலவே, தேவனுடைய சர்வாயுதவர்க்கத்தைக் கொண்டு,எல்லாவற்றிக்கும் மேலாக விசுவாசமென்னும் கேடகத்தைப்பிடித்து (விசுவாசம் தேவனுடைய வார்த்தைகளைக் கேட்பதினால் வருகிறது.ரோமர்.10:11)நாம்உண்மையாகவே பொல்லாங்கனாகிய சாத்தான் எய்யும் சகல அக்கினியாஸ்திரங்களையும் அவித்துப் போட முடியும்.(எபே.6:10-17).விசுவாசமே உலகத்தை ஜெயிக்கிற ஜெயம்.(1யோவா.5:4)பாரமான யாவற்றையும் நம்மைச் சுற்றி நெருங்கி நிற்கிற பாவத்தையும் தள்ளிவிடவேண்டும்.(எபி.12:1-4) ஆவியானவர் சபைகளுக்குச் சொல்லுகிறதை காதுள்ளவன் கேட்கக்கடவன்(வெளி.3:22)

இத்துடன், ஆசியவிலிருந்த ஏழு சபைகளுக்கு எழுதப்பட்ட நிருபங்களைப்பற்றியபாடம் நிறைவடைகிறது. இந்தப்பாடத்திலிருந்து,தேவனை எல்லாவகையிலும் பிரியப்படுத்துவதற்கு, தமிழக கிறிஸ்துவின் சபைகளும், இந்தியா மற்றும் உலகெங்கிலுமுள்ள சபைகளும்,கர்த்தர் எதைச் செய்யச் சொல்லுகிறாரோ அதைச் செய்வதற்கு உதவுவதே நமது ஜெபமாகவும், நோக்கமாகவும் இருக்கவேண்டும்.

**Jon Macon** **EZSR**

# சபை தெரிந்து கொள்ளுங்கள்

## தீர்க்க தரிசிகளால் முன்னுரைக்கபட்டது

கர்த்தராகிய இயேசு கிறிஸ்து தமது இராஜ்யத்தை ஸ்தாபிதம் பண்ண இந்த பூமிக்கு வந்தார். ஆனால், யூதர்களால் புறக்கணிக்கப்பட்ட படியால், தமது இராஜ்ய ஸ்தாபிதத்தை நிறுத்திவைத்து, அதற்குப் பதிலாக சபையை ஸ்தாபித்தார் என்ற பொதுவான ஒரு கருத்து நிலவுகிறது. இக்கோட்பாட்டைச் சார்ந்தவர்கள், இயேசு தமது இரண்டாம் வருகையில் வரும்போது தமது இராஜ்யத்தை பூமியிலே ஸ்தாபிப்பார் என நம்புகின்றனர். இக்கருத்து தடையினால் ஏற்பட்ட திடீர் இடை வெளியை நிரப்புவதற்காக சபை ஸ்தாபிக்கப்பட்டது என்ற கீழான நிலைக்கு சபையைத் தள்ளுகிறது. தமது பிதாவினிடத்திற்குச் சென்று திரும்பும் வரையிலான இடைவெளியை ஏதோ ஒன்றினால் நிரப்புவதற்காக கிறிஸ்துவின் மனதில் தோன்றிய, தாமத ஆலோசனதான் சபை என்கின்றனர். தீர்க்க தரிசிகள் சபையைக் குறித்து ஒன்றுமே சொன்னதில்லை என்றும் பொதுவாக நம்பப்படுகிறது. கிறிஸ்துவின் முதலாம் வருகையைப் பார்த்த அவர்கள், அவருடைய இராஜ்யம் இனிமேல் தான் வரும் எனக்கருதுகின்றனர். இப்பாடத்தில், புதிய எற்பாட்டுச் சபை தேவனால் திட்டமிடப்பட்டது என்பதையும், தீர்க்கதரிசிகளால் முன்னுரைக்கப்பட்டு, இந்தத் தீர்க்கதரிசனங்கள் கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலுக்குப்பின் வந்த முதல் பெந்தகோஸ்தே நாளில் நிறைவேறியது என்பதையும் காணப்போகிறோம்.

சபை தீர்க்கதரிசிகளால் முன்னுரைக்கப்பட்டதா? இதற்குச் சரியான பதிலைக் கண்டுபிடிக்க, வேதத்தின், பழைய ஏற்பாட்டில் குறிப்பிடப்படுகிற இராஜ்ஜியமும், கர்த்தருடைய ஆலயமும் புதிய ஏற்பாட்டுச் சபையையே சுட்டிக்காட்டிப் பேசியது எனப்புரிந்து கொள்வது அவசியமானது.

இயேசு முன்னுரைத்து தாம் தமது சபையைக் கட்டுவதாக சொன்னார் *(மத்.16:18)* அவர் தமது சபையை இராஜ்யமெனக் கூறினார். *(மத்.16:19)*. ஆகையால் சபையும் இராஜ்யமும் இப்பொருளில் ஒன்றே. சபைக்குள் இருப்பவர்கள் இராஜ்ஜியத்திற்குள் இருக்கிறார்கள். தேவனுடைய வீடு ஜீவனுள்ள தேவனுடைய சபை என்று அப்போஸ்தலனாகிய பவுல் கூறுகிறார் *(1தீமோ.3:15)*. இவ்வசனங்களிலிருந்து, கர்த்தருடைய வீடு, இராஜ்யம், சபை என (மாறி மாறி) அடிக்கடி கூறப்படும் பதங்கள் அனைத்தும் ஒன்றையே குறிப்பன என்ற முடிவுக்கு வருகிறோம்.

இவ்வேளையில் இரண்டு சாமுவேல் எழாம் அதிகாரத்தை வாசித்து சிந்திக்கும்படி ஆலோசனையாகச் சொல்லிக்கொள்கிறேன். இவ்வதிகாரத்தில், தாவீது இராஜா தேவனுக்கென்று ஒரு வீட்டைக் கட்ட மனதாயிருப்பதை வெளிப்படுத்துகிறது. இதற்கு முரணாக, தேவன் தாவீதின் நோக்கத்தை புறக்கணித்து, தாவீதிற்காகவும் மக்களுக்காகவும் ஒரு வீட்டைக் கட்டுவதாக தேவன் வாக்களிக்கிறார். இந்தப் பணி, தாவீதின் மரணத்திற்குப் பின் அவரது சந்ததியில் வரும் ஒருவராலே நிறைவேற்றப்படும் என்றார். அவருடைய வீடு கட்டப்படுவதுடன், அவருடைய இராஜ்யமும் ஸ்தாபிக்கப்படும்.

*(2சாமு.7:12-16)* இத்தீர்க்கதரிசனத்தின் முழு நிறைவேற்றமும் தாவீது என்றும் தாவீதின் குமாரன் என்றும் அழைக்கப்பட்ட இயேசு கிறிஸ்துவை சம்பந்தப்படுத்தியது. அவர் தாவீதின் சந்ததி(அப்.13:23). நான் அவருக்குப் பிதாவாயிருப்பேன், அவர் எனக்குக் குமாரனாயிருப்பேன்... எனும் பதம் அப்போஸ்தலனால் கிறிஸ்துவுக்குப்பயன் படுத்தப் படுகிறது. (எபி.1:5). அவருடைய வீடும், சிங்காசனமும், இராஜ்யமும் என்றென்றைக்கும் நிலைத்திருக்கும். *(2.சாமு.7:13-16)*, என்பது கிறிஸ்துவையும் அவருடைய இராஜ்யத்தையுமேயன்றி வேறெதையும் குறிப்பிடுவதில்லை. தாவீதின் பூமிக்குரிய வீடும் இராஜ்யமும் வெகு நாட்களுக்கு முன்பாகவே ஒரு முடிவுக்கு வந்திருந்தன. கிறிஸ்துவின் இராஜ்யம் மட்டுமே நித்தியமானது. பெந்தகொஸ்தே நாளிலே அப்போஸ்தலனாகிய பேதுரு பேசுகையில் தேவன் தாவீதுக்கு சத்தியம் பண்ணி, கிறிஸ்துவை எழுப்பி அவனுடைய சிங்காசனத்தில் அமரப்பண்ணுவதாக கூறினார்.(அப்.2:30).கிறிஸ்துவின் ஆளுகை பெந்தகொஸ்தே நாளிலே அறிவிக்கப்பட்டது. அப்போஸ்தலர் இரண்டாம் அதிகாரத்தைக் காண்க.

நாம் காணப்போகும் முதல் தீர்க்கதரிசனம் ஏசாயாவினால் பதிவாக்கப்பட்டது. ***"ஆமோத்சின் குமாரனாகிய ஏசாயா யூதாவையும் எருசலேமையும் குறித்துக் கண்ட தரிசனம். கடைசி நாட்களில் கர்த்தருடைய ஆலயமாகிய பர்வதம் பர்வதங்களின் கொடுமுடியில் ஸ்தாபிக்கப்பட்டு மலைகளுக்கு மேலாய் உயர்த்தப்படும்; எல்லா ஜாதிகளும் அதற்கு ஓடிவருவார்கள். திரளான ஜனங்கள் புறப்பட்டு வந்து; நாம் கர்த்தரின் பர்வதத்துக்கும் யாக்கோபின் தேவனுடைய ஆலயத்துக்கும் போவோம் வாருங்கள்; அவர் தமது வழிகளை நமக்குப் போதிப்பார், நாம் அவர் பாதைகளில் நடப்போம் என்பார்கள்; ஏனெனில் சீயோனிலிருந்து வேதமும் எருசலேமிருந்து கர்த்தரின் வசனமும் வெளிப்படும்."*** *(ஏசாயா.2:1-3)*.

இந்த வேத வசனம், மலைகளுக்கு மோலாய் அல்லது எல்லா அரசாங்கத்திற்கும் மேலாய் ஸ்தாபிக்கப்பட இருக்கின்ற சபையைப் பற்றிய தீர்க்கதரிசனமாகும். இது குறித்த மூன்று அடிப்படை உண்மைகளை ஏசாயா சொல்லியுள்ளார்.

1. தீர்க்கதரிசனம் கடைசி நாட்களிலே நிறைவேறும்
2. எல்லா ஜாதிகளும் அதற்கு ஓடிவருவார்கள்.
3. எருசலேமிலே இது துவக்கம் பெறும்.

பாபிலோனின் இராஜாவாகிய நேபுகாத் நேச்சாரின் சொப்பனத்திற்கு விளக்கமளித்தபின், தானியேல் முன்னுரைத்து, பரலோகத்தின் தேவன்தாமே என்றென்றும் அழியாத ஒரு இராஜ்யத்தை எழும்பப் பண்ணுவார். இந்த இராஜ்யம் வேறே ஜனத்திற்கு விடப்படுவதில்லை, மாறாக அது பூமியிலுள்ள அனைத்து இராஜ்யங்களையும் அடித்து நொறுக்கி, தானோ என்றென் றைக்கும் நிற்கும் என்றுக் கூறினார்.

யோவான் ஸ்நானகன் யூதாவின் வனாந்திரத்தில் வந்து பிரசங்கித்தபோது தமது செய்தியில் மனந்திரும்புங்கள் பரலோக இராஜ்யம் சமீபத்திருக்கிறது என்று கூறினார்(மத்.3:1). சமீபித்திருக்கிறது என்றால் அருகாமையில் இருக்கிறது என்று

பொருள். இதன் மூலம் யோவான் ஸ்நானகன் காலத்தில் இராஜ்யம் இருக்கவில்லை என்று காட்டுகிறது. இராஜ்யத்தைப் பற்றிய இந்த தீர்க்கதரிசனம் சபையைப் பற்றியது.

எதிர்காலத்தில் ஸ்தாபிக்கப்படவிருந்த இராஜ்யம் சமீபத்திலிருக்கிறது என்று பிரசங்கித்தவர்கள் இயேசுவும் (மத்.4:17). காணமல்போன இஸ்ரவேல்வீட்டாருக்கு பிரசங்கித்த அவருடைய சீஷர்களுமாவார்கள். (மத்.10:5-7).எழுபது சீஷர்களும் இதையே பிரசங்கித்தார்கள். (லூக்கா.10:1-9).இந்த வசனப்பகுதியில் ஒவ்வொன்றும் எதிர்காலத்தில் ஸ்தாபிக்கப்படவிருந்த இராஜ்யத்தையே சுட்டிக்காட்டியது.

மத்.16:18ன்படி, இயேசு தமது சபையை கட்டுவதாக சொன்னதை மீண்டும் நினைவில் கொண்டு வருவோமாக, வசனம் 19ல் அவர் தமது சபையை இராஜ்யம் என்று சொன்னார். இராஜ்யம் என்னும் பதத்தில் முன்னுரைக்கப்பட்டது போலவே,சபை என்னும் பதத்திலும் முன்னுரைக்கப்பட்டது.

இயேசு மற்றுமொரு தீர்க்கதரிசனமாக“..... *இங்கே நிற்கிறவர்களில் சிலர் தேவனுடைய இராஜ்யம் பலத்தோடே வருவதைக் காணுமுன், மரணத்தை ருசிபார்ப்பதில்லையென்று, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்*” என்றார்.(மாற்கு 9:1) இங்கு தேவனுடைய இராஜ்யம் பலத்தோடே வருவதை பார்க்காமல் அங்கே இயேசுவுடன் நின்றவர்களில் சிலர் மரிப்பதில்லை என்று காண்கிறோம்.பெலத்தோடே என்பதின் பொருள் என்ன என்ற கேள்வியை நாம் கேட்கிறோம்.

தமது உயிர்தெழுதலுக்குப் பின் இயேசு தமது சீஷர்களிடத்தில் எழுதியிருக்கிறபடி, கிறிஸ்து பாடுபடவும், மூன்றாம் நாளில் மரித்தோரிடத்திலிருந்து எழுந்திருக்கவும் வேண்டியாதாயிருந்தது. அன்றியும் மனந்திரும்புதலும், பாவமன்னிப்பும் எருசலேம் தொடங்கிச் சகல தேசத்தாருக்கும் அவருடைய நாமத்தினாலே பிரசங்கிக்கப்படவும் வேண்டியது, என்று சொன்னார்(லூக்கா.24:46-47). சகல தேசத்தாருக்கும் பிசங்கிக்கப்படவும் வேண்டியது என்பது, ஏசாயாவினால் உரைக்கப் பட்டபடி நிறைவேறப்போகிறது. கடைசிநாட்களில் இது நிறைவேறிற்றா எனக் காண்போம்.

இயேசு பரமேறிச் சென்ற சிறிது நாட்களுக்கு முன் இஸ்ரவேலுக்கு இராஜ்யத்தைத் திரும்ப கொடுப்பாரா என்று கேட்கப்பட்டது.(அப்.1:6). இயேசு அவர்களிடத்தில் “...*பிதாவானவர் தம்முடைய ஆதினத்திலே வைத்திருக்கிற காலங்களையும் வேளைகளையும் அறிகிறது உங்களுக்கு அடுத்ததல்ல;பரிசுத்த ஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெலனடைந்து, எருசலேமிலும், யூதேயா முழுவதிலும், சமாரியாவிலும், பூமியின் கடைசி பரியந்தமும் எனக்கு சாட்சிகளாயிருப்பீர்கள் என்றார்* ” (அப்.1:7,8). இங்கு பெலன் பரிசுத்த ஆவியோடே வரும் என்று கர்த்தர் குறிப்பிட்டார். இப்படியாக பரிசுத்த ஆவியானவரின் வருகையை நாம் உறுதிப்படுத்தும்போது, பெலன் வந்ததை அறிவோம், அப்பொழுது இராஜ்யமாகிய சபையின் துவக்கத்தையும் அறியலாம்.

பெந்தெகோஸ்தே நாளிலே பரிசுத்த ஆவியானவர் அப்போஸ்த லர்களை நிரப்பினார். அவர்கள் பரிசுத்த ஆவியானவர் தங்களுக்குத் தந்தருளின வரத்தின்படியே புதிய மொழிகளில் அல்லது பாஷைகளில் பேசினார்கள். (அப்.2:1-4).அவர்கள் மதுபானத்தினால் நிறைந்திருப்பதாக குற்றஞ் சாட்டப் பட்டனர். (அப்.2:13) பேதுரு அவர்களின் குற்றச் சாட்டை மறுத்து,அந்த (கூடிவந்த) ஜனங்கள் காண்கிறதும், கேட்கிறதும் யோவேல் தீர்க்கதரிசனத்தின் நிறைவேற்றம் என்றார். கடைசி நாட்களில் மாம்சமான யாவர் மேலும் என் ஆவியை ஊற்றுவேன்.... என்று தேவன் உரைத்திருக்கிறார்.(அப்.2:16-17) இங்கு பெந்தெகொஸ்தே நாளில் நடந்த சம்பவங்கள் கடைசி நாட்களின் நிறைவேற்றச் சம்பவங்கள் என நாம் அறியலாம். பெந்தெகொஸ்தே நாளிலே ஏசாயாவினால் உரைக்கப்பட்ட படியே மூன்று தீர்க்கதரிசன நிறைவேற்றங்களைக் காணலாம்.அவைகள் கடைசி நாட்கள் சம்பவம், எல்லா தேசத்தாரும் அங்கே கூடிவந்திருந்தனர் இந்த சம்பவங்கள் எருசலேமில் துவக்கம் பெற்றவை.

இராஜ்யம் பலத்தோடே வரும் என்று இயேசு சொன்ன வார்த்தை உங்கள் நினைவிற்கு வரும். அந்த பலம் பரிசுத்த ஆவியோடே வந்தது. பரிசுத்த ஆவி பெந்தெகோஸ்தே நாளில் வந்த படியால், தீர்க்கதரிசனத்தில் உரைக்கப்பட்டபடியே இராஜ்யமாகிய சபை,பெந்தெகொஸ்தே நாளில் வந்தது என்ற முடிவுக்கு வருகிறோம். பெந்தெகொஸ்தே நாளில் ஜனங்கள் சுவிசேஷத்தைக் கேட்டு, கீழ்ப்படிந்தனர். இரட்சிக்கப் படுகிறவர்களை கர்த்தர் சபையிலே சேர்த்துக் கொண்டு வந்தார்.(அப்.2:47) பெந்தெகொஸ்தே நாளுக்கு முன்பு யாரும் சபையிலே சேர்க்கப்படவில்லை.ஆதலால் சபை பெந்தெகொஸ்தே நாளில் துவக்கம் பெற்றது.

சபை தேவனுடைய திட்டத்தின்படி அல்லது நோக்கத்தின்படியானது என்றும் கூறலாம். அந்த நோக்கம் இரகசியமாக இருந்தது. பவுல் கூறும்போது, பரிசுத்தவான்களெல்லாரிலும் தான் சிறியவனாக இருந்தும். புறஜாதிகளிடத்தில் தான் பிரசங்கிக்கவும் இரகசியத்தை எல்லாருக்கும் வெளிப்படையாகக் காண்பிக்கிறதற்கும் தேவன் அழைத்தார். இந்த இரகசியத்தை தேவன் ஆதிகாலங்கள் முதல் மறைத்து வைத்திருந்தார், என்று குறிப்பிடுகிறார். இதற்கு இவர் கொடுக்கும் காரணம் என்ன? தேவன் நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்குள் கொண்டிருந்த தீர்மானத்தின்படியே உன்னதங்களிலுள்ள துரைத்தனங்களுக்கும், அதிகாரங்களுக்கும் அவருடைய அநந்த ஞானமானது சபையின் மூலமாய் இப்பொழுது தெரிய வரும் பொருட்டு, சபையிலே முழுக்குடும்பமும், யூதர் புறஜாதியார் அனைவரும் ஒரே மாதிரியாக இருக்கத் தக்கதாக அப்படிச் செய்தார்.(எபே.3:7-11,14).

வரலாற்று ரீதியான சபையின் அமைப்பு எருசலேமில், பெந்தெகோஸ்தே நாளிலே நிறைவேறியது. கிறிஸ்துவின் சரீரமாகிய சபை அந்நாளிலே அமைவு பெறும் பொருட்டாக அப்போஸ்தலர்கள் மீது ஆவியானவர் ஊற்றப்பட்டார். இதை பேதுரு சபையின் ஆரம்பம் (ஆதியிலே) என்று குறிப்பிடுகிறார்.(அப்.11:15-16) ஆதியிலே என்பது பெந்தெகோஸ்தே நாளையே குறிக்கும். இப்படியாக பரிசுத்த ஆவியினால் ஞானம் பெறுவதை அடையாளமிட்டுக் காட்டுகிறார். பெந்தெகோஸ்தே நாள், சபையின் ஆரம்பத்தை, கிறிஸ்துவின் சரீரத்தின் ஆவிக்குரிய நிலையாக மாத்திரம் காட்டாமல், வெளிப்படையாகக் காணப்படும் சபையாக அடையாளப்படுத்துகிறது.

**தமிழில்: E.A. ஆறுமுகம்**

# பாபிலோனிய அடிமைத்தனம்

**I.** a)ஏறக்குறைய கி.மு. 606-ம் ஆண்டில் யூதர்கள் முதன் முதலில் அடிமைகளாக பாபிலோனுக்குக் கொண்டுபோகப்பட்டனர்.

b)பாபிலோனிய ராஜாவாகிய நேபுகாத்நேச்சார் எருசலேமிலிருந்து திரளான பொக்கிஷங்களை கொள்ளையிட்டுச் சென்றான்.

c)இந்த முதல் அடிமைத்தனத்தில்தான் தீர்க்கதரிசியாகிய தானியேலும் பாபிலோனுக்கு நாடுகடத்தப்பட்டான் என்று நம்பப்படுகிறது.

**II.** a)ஏறக்குறைய கி.மு. 597ம் ஆண்டில் யூதர்கள் மீண்டுமாக பாபிலோனுக்கு கொண்டுசெல்லப்பட்டனர்.

b)அப்பொழுது யூதர்களுக்கு ராஜாவாயிருந்த யோயாக்கீனையும், அவனுடைய பிரபுக்கள் பலரையும் நேபுகாத்நேச்சர் சிறைபிடித்துச் சென்றான்.

c)அவனுக்குப் பதிலாக மத்தனியாவை ராஜாவாக ஏற்படுத்தி, அவனுக்கு சிதேக்கியா என்று பெயரிட்டான்.

d)இந்த படையெடுப்பில் தீர்க்கதரிசியாகிய எசேக்கியேல் சிறைப்பிடித்துச் செல்லப்பட்டான். (எசே.33:21)

**III.** a)ஏறக்குறைய கி.மு.586-ம் ஆண்டில் மூன்றாவது முறையாக நேபுகாத்நேச்சார் எருசலேம் மீது மீண்டும் படையெடுத்தான்.

b)அப்போதுதான் எருசலேமின் மதில்களும், தேவாலயமும், அதைச் சுற்றியிருந்த வீடுகளும் தீக்கிரையாக்கப்பட்டன.

c)தேவாலயத்தின் இருந்த மிக விலையுயர்ந்த பொக்கிஷங்களெல்லாம் வாரிக்கொண்டு போகப்பட்டது.

d)கெதலியாவை ஆளுநராக நேபுகாத்நேச்சார் ஏற்படுத்தினான்.

## விடுதலை, விடுதலை ...

1. கி.மு.606-ல் பாபிலோனுக்கு அடிமைகளாக கொண்டுபோகப்பட்ட யூதர்கள் எரேமியா தீர்க்கன் உரைத்ததுபோலவே 70 வருடம் கழித்து கி.மு.536ல் செருபாபேல் தலைமையில் முதல் முறையாக எருசலேம் திரும்பினார்கள்.
2. கி.மு.516-ல் யூதர்கள், ஆவிக்குரிய வாழ்வைக் கட்டிய எஸ்றாவின் தலைமையில் நாடு திரும்பினார்கள்.
3. இறுதியாக, கி.மு.444-ல் தேவாலயத்தின் அலங்கத்தை கட்டின நெகேமியா தலைமையில் விடுதலையானார்கள்.

# விசுவாசத்தின் அடிப்படைகள்
## பாடம் - 5

1. புதிய ஏற்பாட்டைப்பற்றி உடன்படிக்கை எப்படி?
   அ) எபிரெயர் 7:22 அநேக காரணங்களால் அது மேன்மையான உடன்படிக்கை:
   ஆ) எபி.9:15 இயேசுவே அதற்கு மத்தியஸ்தர்.
   இ)1.எபிரேயர் 8:6 இது மேலான வாக்குத்தத்தங்களின் மீது அமைக்கப்பட்டுள்ளது.
2.எபிரேயர் 7:19 இது மேலான நம்பிக்கையைக் கொடுக்கிறது.
3.எபிரேயர் 10:10 இதில் மேலான தியாகம் இருக்கிறது. இயேசுவின் சரீரமும் இரத்தமும் எல்லாருடைய பாவங்களுக்காகவும் தியாகம் செய்யப்பட்டுள்ளது.
   ஈ) எபிரேயர் 13:20 இது நித்திய உடன்படிக்கை
      1. எபிரெயர் 10:29 இது இயேசு கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தத்தோடு தொடர்புடையது
      2. மத்தேயு 26:28 பாவங்கள் மன்னிக்கப்படுவதற்காக சிந்தப்பட்ட புதிய ஏற்பாட்டின் இரத்தம்.
2. அப்படியானால் பழைய ஏற்பாடு இன்று நமக்கு பிரயோஜன மற்றது என்று அர்த்தமாகுமா? பின் வரும் காரணங்களுக்காக அது மதிப்புள்ளது.
   அ) ரோமர் 15:4
   ஆ) 1 கொரிந்தியர் 10:6,11
   இ) இது நம்மை ஒரு சட்டமாக பிணைக்கவில்லை. நாம் இயேசு கிறிஸ்துவின் புதிய ஏற்பாட்டில் கீழ் இருக்கிறோம்.
3. நாம் ஏன் தேவனுடைய வார்த்தைக்கு அவ்வளவு முக்கியத்துவம் கொடுக்கிறோம் ?அது ஏன் அவ்வளவு முக்கியமானது.
   1. நாம் தொடர்ந்து இதை படித்து அதன்படி ஜீவித்தால் நம்மை ஆவிக்குரிய வகையில் விடுதலை செய்யும்.
   2. இது விசுவாசத்தை உண்டாக்கும் (ரோமர்.10:17) யோவான் 20:30,31)
   3. நம்மையும், ஆசீர்வாதமுமான வாழ்க்கையையும் நமக்கு காண்பிக்கிறது உபாகமும்.(30:15,19)
   4. கர்த்தருக்கொன்று நாம் சுவி கொடுக்கத் தக்கதாக நம்மால் கிரியை செய்கிறது.(1.தேசலோ.2:13, கொ.1:6, காலா.5:22,23)
   5. நமக்குத் தேவையான எல்லாவற்றையும் தன்னுள் கொண்டிருகுகிறது (2.பேதுரு.1:3,4)
   6. இரட்சிக்கப்படத்தக்க ஞானவான்களாக நம்மை அது மாற்ற முடியும் (2.தீமே.3:15)

அது உபதேசத்துக்கும் கடிந்துகொள்ளுதலுக்கும் சீர்திருத்தலுக்கும் நீதியைப் படிப்பிக்குதலுக்கும் போதுமானதாயிருக்கிறது.2.தீமோ.3:16

4. இரட்சிக்கப்படத்தக்க ஞானவான்களாக நம்மை அது மாற்ற முடியும் (2.தீமோ.3:15)

5. நம்மை முழுமையாகவும், எந்த நற்கிரியையும் செய்யத் தகுதியுள்ள வனாகவும் செய்கிறது(2.தீமோ.3:17)

6. நம்மை உருவாக்கி நமக்கு சுதந்திரத்தைக் கொடுக்க வல்லமையுள்ள தாயிருக்கிறது.

7. இது சுத்தமானது. நாம் அதற்கு கீழ்ப்படிந்தால் தேவன் நம் ஆத்துமாவை சுத்திகரிப்பார் (சங்.12:6, 1பேதுரு.1:23)

8. அது ஜீவிக்கிறதும், நிலைத்திருகிறதும், என்றும் நிலை நிற்கிறதுமாயி ருக்கிறது.(1.பேதுரு.1:23,25)

9. இது ஒருக்காலும் ஒழிந்து போகாது.(மத்.24:35)

10. நாம் வளர இது உதவும் (1பேதுரு 2:2)

11. நாம் இதை நம் உள்ளத்திலே பதித்துக் கொண்டால் நம் ஆத்துமாக்களை இரட்சிக்கும் (யாக்கோபு 1:2)

12. அது இரட்சிப்புகேற்ற தேவ பெலனாயிருக்கிறது.(ரோமார்.1:13)

13. இது தேவனுடைய நீதி அல்லது நியாயத்தீர்ப்பைவெளிப்படுத்துகிறது (ரோமர்.1:17)

14. கிறிஸ்துவின் ஆராய்ந்து முடியாத ஐசுவரியத்தைப் பற்றி நமக்குச் சொல்லுகிறது (எபே.3:8)

15. இது பரிபூரணமான சுயாதீனப்பிரமாணம் (யாக்.1:25)

16. நம்முடைய இருதயங்களிலே இதை வைத்துக் கொண்டால் தேவனுக்கு விரோதமாக பாவஞ் செய்யாத படிக்கு நம்மைப் பாதுகாக்கிறது.(சங்.119:105)

17. வேதனைக்காலத்தில் இதனிடத்தில் நாம் திரும்ப வேண்டும் சங்.119:50

18. இதை நேசிக்கிறவர்களுக்கு தேனிலும் இனிமையானது (சங்.119:103)

19. இதன்மூலம் நாம் புரிந்து கொள்ளுதலைப் பெற்று கொள்ளுகிறோம். (சங்.119:104)

20. இது நம் கால்களுக்கேற்ற தீபமும், பாதைக்கு வெளிச்சமுமாயிருக்கிறது. (சங்.119:129)

21. இது அதிசயமானது (சங்.119:129)

22. அது ஒளியையும் ,புரிந்து கொள்ளுதலையும் கொடுக்கிறது.(சங்.119:130)

**Charles Di palma** **G.Daniyal**



# HEAR THE VOICE OF TRUTH
## ON RADIO SRILANKA

| LANGUAGE | DAYS | TIME P.M. | ADDRESS | SPEAKER |
|---|---|---|---|---|
| HINDI | Sunday<br>Thursday | 8.45 -9.00<br>9.00 - 9.15 | Box.3815<br>New Delhi -110049 | SUNNY DAVID |
| ENGLISH | Friday | 7.45 - 8.00 | Box.3815<br>New Delhi -110049 | J.C. CHOATE |
| TELUGU | Sun,Mon<br>Tue, Thu | 2.00 -2.15 . | Box . 80<br>Kakinada -533 001 | JOSHUA<br>GOOTAM |
| TAMIL | Sunday<br>Tuesday<br>Thursday<br>Friday | 6.45 - 7.00<br>5.30 - 5.45<br>5.45 - 6.00<br>5.30 - 5.45 | Box . 8405<br>Bangalore - 560 084 | P.R.SWAMY |
| MALAYALAM | Friday | 3.45 - 4.00 | Sunny Meads Lane,<br>Behind Sanskrit<br>College,<br>Trivandrum -695 034 | P.K.VARGHESE |
| KANNADA | Sunday | 1.45 - 2.00 | Box.448<br>Bangalore - 560 004 | ROBERT<br>RATHNAKAR |

***Please write to these address for Bible Correspondence Course***

***Magazines and other Christian Literatures***

ALL OF THESE PROGRAMMES ARE SPONSORED BY THE CHURCH OF CHRIST

REGISTERED NEWS PAPER
RNI No. 47661 / 87 - NEW DELHI

## அஞ்சல் வழி வேதாகமக் கல்வி

பரிசுத்த வேதாகமத்தை முறையாகக் கற்றுக்கொள்ள விரும்புவோருக்கு ஓர் இனிய செய்தி.

ஆம், மிகத் தேர்ந்த முறையில் ஒழுங்கு செய்யப்பட்ட, அஞ்சல் வழி வேதாகமப் பயிற்சியில் நீங்கள் விரும்பினால் சேர்ந்து பயன் பெறலாம். இது 15 பாடங்களைக் கொண்ட ஓர் இலவசப் பயிற்சி. இப்பயிற்சியை வெற்றிகரமாக முடிப்பவர்களுக்கு சான்றிதழ் வழங்கப்படும்.

பயிற்சியில் சேர விரும்புவோர்
தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி

*இயக்குநர்,*

**அஞ்சல் வழி வேதாகமக் கல்வி,**
த.பெ.எண் – 27, காங்கேயம் – 638 701.

வெளியிடுவோர்

**கிறிஸ்துவின் சபையார்,**
தாராபுரம் ரோடு, காங்கயம் – 638 701
தமிழ்நாடு, இந்தியா
✆ 04257-20030

**Published by Church of Christ, Kangayam.**
**Printed at Konar Printers, Madurai. Editor : S. RAJANAYAGAM,**